# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் - ISSN - 2278-7550

மே – 2020

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550



visit us: www.pallavipathippakam.in

ISSN : 2278-7550

பல்லவி பதிப்பகம்

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

ISSN : 2278-7550

மலர் : 8 மே-2020 இதழ் : 5



**பதிப்பாசிரியர்**

**நல் நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549.



**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு – 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



EDITORIAL BOARD

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gmail.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gmail.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gmail.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gmail.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gmail.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

ஆசிரியர் குழு

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gmail.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gmail.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gmail.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gmail.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gmail.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,,சென்னை.*
arangantnou@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

**ADVISORY BOARD**

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Trinity College For Women, Namakkal.*
anukeerthigan@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gamil.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, Chidambaram.*
gayathiripraba1981@gmail.com

**Dr.S.Kumaran**
*University of Malaya,Malaysia,*
skumaran.um@gmail.com

**Dr.S.Senthilkumar**
*Annamalai University, Annamalai nagar,*
dr.senthilkumarcdm@gmail.com

**Sellathurai Sutharsan**
*University of Peradeniya, sri Lanka,*
sellathuraisutharsan@gmail.com

**Dr.N.Sathya**
*Government College For Women, Kumbakonam,*
drsathiyatamil@gmail.com

**Balasundaram Elayathamby**
*Annamalai Canada Campus, Canada,*
Balasudarame@yahoo.com

**Dr.S.Priya**
*Government Arts College, Chidambaram,*
rojacreatives@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பன்னாட்டு வளாகம், இலங்கை.*
raapa.arooz@gmail.com

**ஆலோசனைக் குழு**

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anukeerthigan@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gamil.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் க.காயத்ரி**
*அரசு கலைக்கல்லூரி, சிதம்பரம்.*
gayathiripraba1981@gmail.com

**முனைவர் எஸ்.குமரன்**
*மலாய் பல்கலைக்கழகம், மலேசியா.*
skumaran.um@gmail.com

**முனைவர் ச.செந்தில் குமரர்**
*அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்*
dr.senthilkumarcdm@gmail.com

**செல்லத்துரை சுதர்சன்**
*பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.*
sellathuraisutharsan@gmail.com

**முனைவர் நா.சத்யா**
*அரசினர் மகளிர் கல்லூரி, கும்பகோணம்,*
drsathiyatamil@gmail.com

**பாலசுந்தரம் இளையதம்பி**
*அண்ணாமலை கனடா வளாகம், கனடா,*
Balasudarame@yahoo.com

**முனைவர் ச.பிரியா**
*அரசு கலைக்கல்லூரி, சிதம்பரம்,*
rojacreatives@gmail.com

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன…!

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான ஒரு புதியகளம். இவ்விதழ் 2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக வெளிவந்தது. 2018 இல் இருந்து மாத இதழாக வெளிவருகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல் இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : MSWord இல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (Lining Space), பாமினி (Bamini Font) - 12 புள்ளி எழுத்தளவில், மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரைத் தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. **சந்தா** : தனி இதழ் விலை ரூ.350/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 3000/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம், கல்வி நிறுவனங்கள்) | - | ரூ. 3600/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**MOBILE BANKING**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**

**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**




**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையத்தளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையத்தளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம்

***முனைவர் அ.பாக்கியமுத்து** - 1

2. தமிழ் இலக்கியங்கள் இயம்பும் அறச்சிந்தனைகள்

***சே.சித்ரா** - 4

3. பாவலர் நாச்சியப்பன் கவிதைகளில் வாழ்வியல் அறம்

***முனைவர் திருமதி ஜெ.காவேரி** - 7

4. இலக்கியங்களில் தனிமனித அறச்சிந்தனைகள்

***முனைவர் அ.அன்னம்மாள்** - 10

5. கம்பர் காட்டும் வாழ்வியல் நெறிகள்

***முனைவர் சி.வடிவேலன்** - 14

6. சுஜாதாவின் கட்டுரைகளில் அறச்சிந்தனைகள்

***சா.அனிகரோலின்** - 17

7. தமிழ் இலக்கியங்கள் கூறும் வாழ்வியல் சிந்தனைகள்

***கு.நந்தினி** - 19

8. இலக்கியமும் இயற்கை மருத்துவமும்

***முனைவர் ர.பன்னீர் செல்வன்** - 22

9. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பார்வையில் உழவன்

***முனைவர் த.க.புஷ்பராஜ்** - 25

# தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம்

***முனைவர் அ.பாக்கியமுத்து,** தமிழ்த்துறை இணைப்பேராசிரியர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம்.

**முன்னுரை**

உயிர்களிடத்து அன்பு செய்தலையும் பிற உயிர்கள் பால் ஏற்படும் இரக்க குணத்தையுமே மனிதநேயம் எனலாம். உலக உயிர்களைத் தன்னுயிர் போல பாவித்து அவைகளுக்கு இன்னல்கள் செய்யாமலும், அவைகளின் துன்பத்தைத் தன் துன்பம் போல் பாவித்தலையும் கூட மனிதநேயம் என அழைக்கலாம். மனித நேயம் தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள பாங்கை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**மனித நேயம் - விளக்கம்**

தெரிந்தோ, தெரியாமலோ எதிர்பாராமல் ஒருவருக்கு உதவுகின்ற மனப்பான்மையை நாம் மனிதநேயம் எனலாம். ஓர் உயிர் பிறிதோர் உயிரிடம் காட்டும் அன்பு, இரக்கம், அருள், ஈகை, பரிவு, கருணை மற்றும் கனிவு முதலியவை மனிதநேயத்தைக் காட்டும் மெய்ப்பாடுகளாகக் கொள்ளலாம். மனிதநேயம் என்பதற்கு அமெரிக்கக் கலைக்களஞ்சியம், “மனிதநேயம் ஏதேனும் ஓர் ˙அரசியலைச் சார்ந்தோ, அல்லது எதனையும் சாராமல் தனித்தோகூட இருக்கலாம் ஆனால் உயிர்துடிப்பு என்னவென்றால் என்று விளக்கம் தருகிறது.

“மனிதனது பெருமையையும் உரிமையையும் மதிக்கும் வகையில் அமைந்த ஒரு கோட்பாடு மனிதனின் ஆளுமைப் பண்புகளை மதிக்கவும், அவனது நலன்களைப் பேணி வரவும், சமூக வாழ்வின் அனைத்துத்துறைகளிலும் மனிதன் முழுமையான வளர்ச்சியைப் பெறவும் இக்கோட்பாடு துணைபுரிகிறது. சமயம் மற்றும் இனவெறிக் கொடுமை சமயக் காழ்ப்பு, மாற்றுக்கோட்பாட்டை வெறுத்தல் ஆகிய அனைத்து இயல்களையும் களைவது இக்கோட்பாட்டின் நோக்கமாகும்” என்ற மனிதநேயத்தை ஃபிரோலோவ் விளக்குகிறார். எனவே மனிதநேயம் உயிர்களுக்குள் ஓர் பிணைப்பை ஏற்படுத்துகிறது. ஒன்றை ஒன்று மதிக்கும் மாண்பை வளர்க்கிறது எனலாம்.

**மனித நேயத்தின் குறிக்கோள்**

மனிதநேயக் கோட்பாட்டின் குறிக்கோள் மனிதனை நடத்த வேண்டும் என்பதாகும். இக்கோட்பாட்டின் குறிக்கோளை எஸ்.போபொவ் இவ்வாறு காட்டுகிறார். மனிதப் பெருமையை உறுதி செய்தல், மனிதனைக் காட்டிலும் எந்த மதிப்பும் உயர்ந்ததன்று என உறுதி செய்தல், மனித உழைப்பை போற்றுதல், மனிதனின் அறிவு, ஆற்றல் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்தல், மனிதனின் உரிமைக்கு ஏற்பச் சுதந்திரமான வளர்ச்சியை வழங்கல் என்றும் சுட்டுகின்றார். (பார்க்க: ம.நாராயணன், பெரியாரும் மனிதநேயமும், ப.720) ஆகவே மனிதநேயம், மனிதத்துடன் தொடர்புடையது. மனித வளர்ச்சிக்கு உதவக்கூடியது. மனிதனின் அறிவு, ஆற்றலோடு தொடர்புடையது என்பதை அறிய முடிகிறது.

**சங்க இலக்கியத்தில் மனிதநேயம்**

பண்டைய தமிழர்களின் வாழக்கையைக் காட்டும் கண்ணாடி சங்க இலக்கியங்கள், இவை அகம், புறம் சார்ந்த இலக்கியங்களாக விளங்கினாலும் அவை அனைத்திலும் மனிதநேயக் கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. (குறுந்தொகை.3) பாடலில் தலைவி தலைவன் மேல் வைத்துள்ள அன்பானது மனிதநேயமாக மலர்கின்றதை அறிய முடிகிறது. நெய்தற் கலியில் வரும், 133-வது பாடலடிகள் ஒவ்வொன்றும் மனிதநேயத்தின் ஆணிவேர்க் கருத்துக்களாக அமைந்துள்ளது. புறநானூற்றில் கணியன் பூங்குன்றனார். பாடிய, யாதும் ஊரே என்ற 192-வது பாடலானது பாடல் மனிதநேயத்தின் பரந்துபட்ட நோக்கைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு சங்க அக, புற இலக்கியங்கள் இல்லற அன்பின் வழியும், மக்களின் மனங்களில் இருந்த ஒற்றுமை வழியும் மனிதநேயக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன.

**நீதி இலக்கியங்களில் மனிதநேயம்**

நீதி நூல்களில் காணலாகும் கருத்துக்கள் நீதியைப் போதித்தாலும் அவற்றின் வழி மனிதநேயக் கருத்துக்களையும் வெளிப்படுத்துகின்றன. திருவள்ளுவர் திருக்குறள் அருள் உடைமை, அன்புடைமை என அதிகாரங்கள் வகுத்து, ஒவ்வொரு குறள்களிலும் மிக உயர்ந்த மனிதநேயத்தை வலியுறுத்துகிறார்.

**பக்தி இலக்கியங்களில் மனிதநேயம்**

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி இறைப் பெருமையை எடுத்துரைத்து மக்கள் மனதில் அருளையும், பக்தி உணர்வையும் உண்டாக்கினர். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க நமசிவாய மந்திரத்தைக் சொல்லி மெய்ப்பொருளைக் கண்டனர். குலசேகராழ்வார்

**"படியாய்க் கிடந்துள் பவளவாய் காண்பேனே"**

**(நாலாயிர திவ்வியபிரபந்தம்.ப.685)**

என்று திருமால் மீது தீராத பக்தியுடன் பாடுகிறார்.

**"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்**
**வாடினேன் பசியினால் இளைத்தே" (திருவருட்பா, 6-ஆம் திருமுறை, பா.62)**

என்று அ∴றினை உயிர்கள் வாடுவதைக் கூடத் தாங்க மாட்டாது வள்ளலார் கூறும் கருத்து மனிதநேயத்தின் உச்சத்தை உரைப்பதாக உள்ளது என உலக உயிர்களுக்கெல்லாம் அன்பு செய்யும் மனப்பான்மையுடன் வள்ளலார் பாடுகிறார்.

**"எல்லோரும் இன்புற்று**
**இருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்றும்**
**அறியேன் பராபரமே" (தாயுமானவர், பராபரக்கண்ணி, பா.221)**

என்று தாயுமானவர் உலக உயிர்களின் இன்பத்தைப் பெரிதும் விரும்பும் நிலையைப் பாடியுள்ளார். உலக உயிர்களைத் தம்முயிராகக் கருதி அவ்வுயிருக்கு வரும் துன்பத்தைத் தமக்கு வரும் துன்பமாக எண்ணி வருந்தும் மனிதநேயக் சிற்பிகளாகப் பக்தி மார்க்கத்தில் வந்த அருளாளர்கள் விளங்கினர்.

**இக்கால இலக்கியங்களில் மனிதநேயம்**

நிகழ்கால உலகைக் கண்டு படைப்பாளியின் மன வழியாக வெளிப்படுகின்ற எழுச்சிமிக்க, ஆணித்தரமான அடிப்படைக்கருத்துக்களே இக்கால இலக்கியங்களில் பரவும் ஊடு நூலகமாகவும் அமைந்து கிடக்கின்றன. பெரும்பாலும் இன்றையப் படைப்பாளிகளில் கவிஞர்களே அதிகமாக மனிதநேயத்தைப் படைத்துக் காட்டுகின்றனர். பாரதியார்,

**"எல்லோரும் அமர நிலையை**
**எய்தும் நன்நிலையை**
**இந்திய உலகிற்கு அளிக்கும் ஆம் ஆம்**
**இந்தியா உலகிற்கு அளிக்கும்"**

என்ற வரிகளில் உலக மக்களின் மகிழ்ச்சியான வாழ்வைப் பற்றி எண்ணிப் பாடுகிறார்.

**"எல்லோரும் ஓர் குலம்**
**எல்லோரும் ஓர் இனம்**
**எல்லோரும் இந்திய மக்கள்"**

என்று முழக்கமிடும் பாரதி மக்களிடையே சமதர்ம சமுதாய எண்ணத்தை உண்டாக்கும் விதையை விதைக்கிறார். பாரதிதாசன்,

**"தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்**
**தொல்லுலக மக்களெலாம் ஒன்றே என்னும்**
**தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் ஆங்கே**
**சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே"**

என்று உலக மக்களின் தூய்மையான அன்புள்ளத்தைக் காட்டி, மக்கள் அனைவருமும் ஒன்றே என்னும் தாயுள்ளத்தை வேண்டுகிறார்.

**"எல்லோருக்கும் உலகம் ஒண்ணு**

**இருளும் ஒண்ணு ஒளியும் ஒண்ணு**

**…………………….. இரத்தம் ஒண்ணு தானே**

**ஆகமொத்தம் பிறந்ததெல்லாம்**

**பத்தாம் மாதம் தானே"**

என்று பட்டுக்கோட்டையார் வரிகள் உலகப் பொதுமையை வலியுறுத்துகிறது. அனைவரும் சாதி, மத, இனப் பேதமின்றிச் சமம் என்ற உணர்வைப் பட்டுக்கோட்டையார் காட்டுகிறார். நதிகள் பிறக்குமிடம் வெவ்வேறாக இருந்தாலும் அவை சங்கமிக்கும் இடம் கடலாகும் என்ற கருத்தின் வழிக் கண்ணதாசன் மக்கள் பல்வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் அவர்கள் ஒன்றுபடுவது மனிதநேயப் பண்பில்தான் என்பதை,

**"இராமன் என்பது கங்கை நதி**

**அல்லா என்பது சிந்து நதி**

**ஏசு என்பது பொன்னி நதி**

**நதிகள் பிறக்குமிடம் பலவாகும்**

**எல்லா நதியும் கலக்குமிடம் கடலாகும்"**

என்ற திரைப்படப் பாடல் வரிகள் காட்டுகிறது. மக்கள் அன்போடு பழகினால் மட்டும் போதாது. மனித நேயத்துடன் பழக வேண்டும் என்பதைக் கவிஞர்.பா.விஜய் அவர்கள்,

**"மீண்டும் சொல்கிறேன்!**

**மனிதர்களே**

**மதத்தைத் தள்ளி வையுங்கள்**

**ஆண்டவனை அதற்கு**

**அப்பால் நிறுத்துங்கள்**

**மனித நேயத்திற்கு வாருங்கள்" (ஒரு தூரிகை துப்பாக்கியாகிறது. ப.42)**

என்ற அடிகளில் வெளிப்படுத்துகிறார்.

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் தொடங்கி இக்கலா இலக்கியங்கள் வரை மனிதநேயத்தை வலியுறுத்தாத இலக்கியங்களே இல்லை எனலாம். ஒவ்வொரு கால இலக்கியங்களும் தங்களின் பாடுபொருளுக்கு ஏற்ப மனிதநேயத்தை வலியுறுத்துவனவாக உள்ளன. மனிதம் சிறந்தால் மானுடம் சிறக்கும். மானுடம் சிறந்தால் மானுடநேயம் சிறக்கும். மானுட நேயம் சிறந்தால் வையம் சிறக்கும் தழைக்கும்.

# தமிழ் இலக்கியங்கள் இயம்பும் அறச்சிந்தனைகள்

*சே.சித்ரா, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கே.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கே.ஆர்.நகர், கோவில்பட்டி.

**முன்னுரை**

இலக்கியங்கள் யாவும் நற்சிந்தனைகளை வளர்க்கும் நோக்கில் எழுந்தனவாகும். அதனாலே அவை காலத்தால் என்றும் பொன்றாது நின்று நிலவுகின்றன. அவ்வகையில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் சங்கம் தொட்டு இன்றுவரை சமுதாயத்திற்கு நல்லதொரு வழிகாட்டிகளாய் விளங்கிவருகின்றன. இதனை அவற்றில் பொதிந்துள்ள அறச்சிந்தனைகளால் உணரமுடிகின்றது. அறம் என்ற சொல் பற்றி முனைவர் இரா.சந்திரசேகரன், ப.சரவணன் ஆகிய இருவரும் "அறத்தை நல்ல ஒழுக்கநெறிகளின் தொகுப்பு"[1] என்று கூறுவார்கள். ஹென்ரிச் என்ற அறிஞர், "அறம் என்ற சொல் இயக்குதல், வழிக்காட்டுதல், செயலாட்சி, கொள்கைமுறை, நடத்தை, தகுதி, மரபு, ஒழுங்கு, முன்னுணர்மதி, அரசியல் அறிவுத்திறன், அரசியல் சூழ்ச்சித்திறன் என்றும் வேறு பல பொருள்களையும் உணர்த்துவதாக அமைகின்றது"[2] என்பார். மூதறிஞர் இராஜாஜி, "அறம் தருகின்ற பரந்தபொருள் ஆங்கிலத்திலோ, வேற்றுமொழியிலோ இல்லை"[3]என்று தமிழ்மொழியின் அறம் கூறும் பெருமையை உணர்ந்து கூறுவார். அவ்வகையிலமைந்த இலக்கியப் பொருண்மைகளைக் கவிதைகளால் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சங்க இலக்கியத்தில்..........**

சங்ககாலம் போர் நிறைந்தகாலம். போரிலும் நல்லறம் பின்பற்றும் மன்னர்கள் வாழ்ந்து, மனிதவளத்தைச் செய்த காலமிது. போரிலும், போருக்கு முன்னரும் அறத்தை அறைகூவலாய் விடுத்தனர். சான்றாக, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பான்,

**"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கட னிறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாதீரும்**
**எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்**" என

அறைகூவல் விடுப்போனாய்,

**"அறத்துஆறு நுவலும் பூட்கை" ( புறம்.9,அடி.1-6 )**

கொண்டோனாய் விளங்கியதை நெட்டிமையார் செய்யுளால் காட்டுகின்றார். பசுக்கள், அந்தணர், பெண்டிர், நோயுற்றோர், மூத்தவருக்குக் கடன்செய்வோர், புதல்வரைப் பெறாதார் இவர்கள் பகைப்புலத்தாராக இருப்பினும் மென்மைத்தன்மை பெற்றவராதலால் போர்த்துன்பத்தினின்று பாதுகாத்தற்குரியவர். அதனால் அவர்கள் பாதுகாப்பான அரண்சேர்க என்று அறத்தின் வழிகூறிய பூட்கை கொண்டவன் என்று கூறி புலவர் பெருமிதவுணர்வு அடைகின்றார்.

போரினால் ஏற்படும் இழப்புத்துன்பம் அளவிடற்கரியது. ஆதலால் கோவூர்க்கிழார் எனும் புலவர், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளியின் இடையே நிகழவிருந்த போரை நிகழவொட்டாது செய்துள்ளார்.

**"இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்**
**கடுஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்**
**நின்ன கண்ணியும் ஆர்மிடைத் தன்றே; நின்னோடு**
**பொருவோன் கண்ணியும் ஆர்மிடைத் தன்றே;**
**ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே**
**இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால்,**
**குடிப்பொருள் அன்று, நும்செய்தி; கொடித்தேர்**
**நும்மோர் அன்ன வேந்தர்க்கு**
**மெய்ம்மலி உவகை செய்யும், இவ் இகலே!"** (புறம்.45)

எனக் கூறியது நாட்டை ஆட்சி செய்யும் அரசும், அவர் சார்ந்த பலரும் சண்டையிட்டுக் கொள்வது நன்மையானதல்ல என்று இக்காலத்துக்கும் கூறும் அறிவுரையாகி இப்பாடல் நாட்டு ஒற்றுமைக்கு உரிய அறமாகியுள்ளது காணலாம்.

ஒருவர் செய்த நன்றியை எந்நாளும் மறத்தல் ஆகாது. அவ்வாறு மறந்தால் உலகில் இழைக்கப்படும் துன்பங்களில் எல்லாம் அது மேலானதாக, உய்வுக்கு மாற்று இல்லாததாக ஆகிவிடும். இதனை, ஆலந்தூர்கிழாரின் பாடல் பின்வருமாறு வலியுறுத்தும் முறையில் எடுத்துரைக்கின்றது.

**"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்**
**மாண் இழை மகளிர் கருச்சிதைத் தோருக்கும்**
**குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்**
**வழுவாய் மருங்கின் கழுவாயும் உள' என,**
**நிலம்புடை பெயர் வதாயினும், ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்' என,**
**அறம் பாடின்றே" ( புறம். 34, அடி 1-7) என்கிறது**

இப்பாடலில், செய்யத்தகாத செயல்களான பசுமடியறுத்தல், பெருமை கொண்ட மகளிரின் கருச்சிதைத்தல், ஆசிரியர் சொல் தவறுதல் இவற்றுக்கு மாற்று உண்டாம். ஆனால் மாறாகச் செய்ந்நன்றி கொன்றோர்க்கு மீட்சி இல்லையாம் என அறம் சொன்ன சான்றோர் இயம்பியுள்ளது எந்நாளும் எண்ணத்தக்கது.

**அறநூலில்……….**

அறநூல் இலக்கியங்களில் தலைமை சான்ற இலக்கியமான திருக்குறள் அறம் பற்றி கூறுகையில்,

**"மனத்துக்கன் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற." (குறள்.34) என்கிறது.**

இங்கு திருக்குறளார் மனத்தளவிலும் பிறருக்குத் தீங்கு எண்ணாது இருத்தலே உயர்ந்த அறம் என்று விளக்கம் அளிக்கின்றார். மேலும் அறத்தின் வழி, பயன் இதுதான் என்று யாரும் தெளிவுபடுத்திக் காட்டவேண்டாமாம். ஏனென்றால் சிவிகையில் ஊர்தல் போன்ற உயர்ந்த பயனை ஒருவன் அடைதலும், மாறாகக் கீழான நிலை எய்துதலும் ஆகிய இரண்டு நிலைப்படுத்திக் காட்டுகின்றார் வள்ளுவர் பெருந்தகை.

**"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானொடு ஊர்ந்தான் இடை."** (குறள்.37)

என்று குறளாகியுள்ளது.

மானுடராகப் பிறந்தவர்கள் தானம், தவம் என்ற இருபெரும் அறமுயற்சிகள் செய்தாலே வானவர் நாடு தானாகத் திறந்து விடுமென ஔவை தனிப்பாடலால் வெளிப்படுத்தினார்.

**"அரிதரிது மானுட ராதல் அரிது**
**மானுட ராயினும் கூன்குருடு செவிடு**
**பேடும் நீங்கிப் பிறந்த லரிது**
**பேடு நீங்கிப் பிறந்த காலையும்**
**ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது**
**ஞானமும் கல்வியும் நயந்த காலையும்**
**தானமுந் தவமுந் தான்செய லரிது**
**தானமுந் தான்செய் வாராயின்**
**வானவர் நாடு வழிதிறந் திடுமே" (த.பா.57)**

என்று உண்மையான மானுடப் பிறவியாக இருக்க, வாழ்வாங்கு வாழ வாழ்க்கையில் படி நிலைகள் பலவுள்ளன என்று வரிசைப்படுத்தினார்.

**பக்தி இலக்கியங்களில்……….**

பக்தி இலக்கியவாதிகள் பிறவிப்பெருங்கடலைக் கடக்க உதவும் புணையாக இறைவனைக் கருதுவர். மேலும் அவர்கள் புணையாகிய இறைவனை வணங்குதலே அறமாக்கினர். அதனாலே ஆண்டாளும் மனத்தினில் தூய்மையாய், கையினால் பூ மலர்த்தூவி, வாயால் புகழ் பாடி, மனத்தினாலும் அவனைச் சிந்திக்க, பிறவியில் ஏற்பட்ட, ஏற்படும் குற்றங்கள் யாவும் தீயிலிட்ட தூசாகி அழிந்து போகும் என்று கண்ணனின் அருள்தன்மையை, வணங்கும் தன்மையையும் கீழ்வரும் பாசுரத்தால் குறிப்பிடுகின்றார்.

**"தூயோமாய் வந்துநாம் தூமலர்த்தூ வித்தொழுது**
**வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்**
**போய பிழையும் புகுதருவான் நின்றனவும்**
**தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்"**(திருப்பாவை பா.5,அடி.5-8)

கண்ணனை வணங்கினால் இவ்வுலகம் பெறும் செழிப்புகளை ஆண்டாள் பாசுரத்தால் காட்டியுள்ளார். கண்ணனை வணங்க, இவ்வுலகம் அடைதற்கரிய மூன்று வளங்களைப் பெறுமாம்.

அதற்கு பெண்கள் கூட்டுப்பிராத்தனையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பின்வருமாறு ஆற்றுப்படுத்துகின்றார்.

**"தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து**
**ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி**
**வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்"**(திருப்பாவை-பா.3,அடி.3-8)

கண்ணனை வணங்க மாதம் மூன்று முறை மழை பெய்தலோடு, பால்வளம், பசுமைவளம், மீன்வளம், அமைதிவளம் என்ற செல்வ வளங்கள் கிட்டுமாம். இத்தகைய இறைவணக்கத்தில் தன்னலம் கருதாத பொதுநலமான உலகநலம் நிறைந்துள்ளது உணரமுடிகின்றது.

**புதுக்கவிதைகளில்…………….**

பெண்கள் எட்டும் அறிவினில் எல்லா நிலைகளிலும் உயர்ந்து நிற்கின்ற காலமிது. ஆனாலும் பெண்மையைப் போதை, போகப்பொருளென எண்ணிச் சிதைக்கும் அற அவலநிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதனைப் புதுக்கவிதைகள் பெண் எழுத்துகளால் வெளிப்படுத்தி வருகின்றது.

**"பள்ளி தலமனைத்தும்**
**கோயில் செய்குவோம்**
**என்றான் பாரதி**
**கோயிலையே**
**பள்ளியறையாக்கி விட்டார்கள்**
**பாவிகள்……..** **(சுமதிஸ்ரீ - தகப்பன்** சாமி - ப.44)

என்று பிஞ்சுக்குழந்தைகளை நசுக்கும் வக்கிரப் புத்தி படைத்தவர்களை இனம் காட்டுகின்றார். மேலும் ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானமாய் இன்னமும் வாழவில்லை என்பதை அடையாளப்படுத்திக் காட்டும் புதுக்கவிதை பின்வருமாறு அமைகின்றது.

**"அகிலத்திற்கு**
**அர்த்த நாரியாய்**
**அறிவித்துக் கொண்டாலும்**
**உள்ளுக்குள்**
**இருக்கத்தான் செய்கிறது**
**ஊர்த்தவ தாண்டவ வன்மம்"** (தகப்பன் சாமி - ப.27)

இதற்குரிய மூலகாரணம், மானுடப்பிறவிகளிடையே மனதில் தோன்றும் தன்னலமே. இத்தன்னலத்தின் காரணமாகவே பெற்றோரை, மூத்தவரைப் புறக்கணிக்கும் போக்கும் நிகழ்ந்து வருகின்றது. இதனை,

**"எப்போதாவது**
**பிள்ளைகள் அனுப்பும்**
**கடிதத்தில்**
**ஒட்டியிருக்கும்**
**பருக்கைச் சோறு…..**
**பெற்றவளுக்கு உணவிடாத**
**பாவம் போக்குமென**
**மனம் தோன்றும்**
**முதியோர் இல்லத் தாயை**
**பரிகசிக்கிறது**
**ஃபெவிகால் தடவி வந்த**
**கடிதம்" (தகப்பன் சாமி – ப.45)**

என்று தாயின் தனிமை நிலையைச் சுட்டுகின்றது.

**முடிவுரை**

போரினாலும் மக்கள் துன்பம் அடைதற்கூடாது என்ற சிந்தனை சங்கத்தில் இருந்தது. அற இலக்கியகாலத்தில் யாருக்கும் மனதளவிலும் துன்பம் இழைத்தல் ஆகாது, நன்றியுணர்வோடு வாழவேண்டும் என்ற உயரிய நோக்குகள் இருந்தன. பக்திஇலக்கிய காலத்தில் கடவுளை வணங்குவதும் பொதுநலம் கருதிய உலக நன்மைக்காகவே என்ற சிந்தனை வேரூன்றி வளர்ந்தது. இக்காலத்தில் பெண்மையைப் போற்றவேண்டும் என்று வலியுறுத்தும் போக்கு கவிதைகளில் பெண் எழுத்துகளாலும், ஆண்களாலும் பேசப்பட்டு வருகின்றது. காலந்தோறும் எது தேய்ந்து உள்ளதோ அது மேன்மையுற இலக்கியவாதிகள் தங்களின் படைப்புகளின் கருவாகக் கொண்டு கவிதையாக வடித்து வருகின்றார்கள். இவற்றை சமுதாயம் வெறும் ஏட்டு எழுத்துகளாகக் கருதாமல் நடைமுறை வாழ்க்கைக்குரிய கடனாகக் கருதினால் உலகம் உள்ளளவும் அறம் செழிக்கும் என்பது உறுதியே.

**துணை நின்ற நூல்கள்:**


1. முனைவர் இரா.சந்திரசேகரன், ப.சரவணன் - நாலடியாரில் அறவாழ்வு – ப.2
2. Zimmar henrich, Philosophics of India – p.37
3. க.த.திருநாவுக்கரசு – திருக்குறள் நீதி இலக்கியம் - ப.49

# பாவலர் நாச்சியப்பன் கவிதைகளில் வாழ்வியல் அறம்

***முனைவர் திருமதி ஜெ.காவேரி,** தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியை, வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

இலக்கியம் என்பது காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி மக்களின் வாழ்வியல் வழிகாட்டி மக்களுக்கு ஓர் இலக்கினை அறிவுறுத்தக் கூடியதாக விளங்கக்கூடியது என்று கூறிக் கொண்டே செல்லலாம். எனில் இலக்கியங்களானது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருட்களை விளக்குவதாய் இருக்க வேண்டும். அப்படி இருக்கும் இலக்கியங்களே மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்து, காலங்கள் பல கடந்து நிற்கும். அப்படி இல்லாத இலக்கியங்கள் மின்மினிப் பூச்சியாய் தோன்றிய சில காலங்களிலேயே அழிந்து விடும். அவ்வகையில் தமிழ்நாட்டில் பாரதிதாசன் பரம்பரையைச் சார்ந்த கவிஞர்களுள் ஒருவரான கவிஞர் நாச்சியப்பன் கவிதைகளில் இடம்பெறும் வாழ்வியல் சார்ந்த அறங்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

'பொன்னி' இதழில் பாரதிதாசன் பரம்பரையில் இரண்டாவதாக அறிமுகமான கவிஞர் நாச்சியப்பன் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் ஆத்தங்குடியில் 13.07.1927இல் பிறந்தவர். இவரது பெற்றோர் சித.நாரா.நாராயணன் செட்டியார், அன்னபூரணி ஆச்சி. அச்சகத் தொழிலை மேற்கொண்டவர், கவிதை, சிறுகதை, கட்டுரை, புதினம், கதைப்பாடல் எழுதுவதில் வல்லவர். இவர் இளம் வயதிலேயே பாவேந்தர் மீது மிகுந்த ஈடுபாடு உடையவர். இளமைக் காலத்திலேயே, பாவேந்தரைத் தம் ஊருக்கு அழைத்து இலக்கியக் கூட்டங்கள் நடத்திய பெருமைக்குரியவர்.

1940-1950இல் பொன்னி இதழின் துணையாசிரியராக இருந்த நாச்சியப்பன், 1945இல் ஐங்கரன் எனும் கையெழுத்து ஏடு நடத்தியும், ஆத்தங்குடியில் திராவிடர் கழகம் தொடங்கியும் பெரியாரிடம் பாராட்டு பெற்றவர். 1948இல் 'கொய்யாக் காதல்' எனும் காவியம் எழுதி வெளியிட்டார். இவர் 1975இல் 'இளந்தமிழ்' என்ற ஏட்டினைத் தொடங்கி நடத்தினார். இவர் நாற்பதுக்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்துள்ளார். சிறுவர்களுக்காக பல கவிதைகளையும் கதைகளையும் படைத்துள்ளார். இவர் இயற்றிய பாடல்களின் இரு தொகுதிகளும் 1980-1981களில் வெளிவந்தன. சிறுவர் பாடல்கள் மட்டுமல்லாது, திறனாய்வுகளையும், புதினங்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பாரதிதாசன் வழியிலேயே கடவுள் மறுப்பு, தமிழ்ப்பற்று, சமுதாயப் பார்வை, பகுத்தறிவு முதலான பொருண்மைகளில் இவர்தம் கவிதைகளில் அமைந்துள்ளன.

**சமூகம்**

சமூகத்தில் புரையோடிச் செல்லரித்து வந்த மூடப் பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் தகர்த்தெறியப் பாரதியார், பாரதிதாசன், கவிமணி போன்றோரது வரிசையில் பாவலர் நாச்சியப்பனும் சிறந்த கவிதைகளைப் படைத்துள்ளார். பாரதியார், பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் விறுவிறுப்பும் வேகமும் இவரது கவிதைகளிலும் காணப்படுகின்றன. சாதிஈ சமயம் போன்றவற்றின் பெயரால் நடக்கும் கொடுமைகளையும், வஞ்சனை, சதி, ஏமாற்று, பேராசை, பேடிமை, பொறாமை போன்ற இழிபண்புகளை ஒழித்துக் கட்ட பாரதி, பாரதிதாசன் தனது கவிதைகளில் கூறியதைப் போன்றே இவரும் தனது கவிதைகளில் சமூகத்திற்குப் பல கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார்.,

சாதி, சமயத்தின் பெயரால் மக்கள் பிளவுற்று வாழ்வதைப் பாரதி சபிக்கின்றார். இந்நாட்டில் வேதியராகப் பிறந்தாலும் சரி, வேறு குலத்தினராகப் பிறந்தாலும் சரி அனைவரும் ஒரு குலத்தினரே. அவருள் எவ்வித வேற்றுமையும் இல்லை என்பதை அறிவுறுத்திய பாரதி,

**"ஒன்று பட்டாலுண்டு வாழ்வு – நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"**

என்று மக்களுக்குள் ஒற்றுமை வேண்டும் என்பதையும், அதைப் பேணாதிருப்பின் அனைவருக்கும் தாழ்வே என்பதையும் தெரிவிக்கின்றார். பாவலரும் இதே கருத்தினைப் 'பண்பின் பரிசு' என்ற கதைப்பாடலில் விளக்குகின்றார். ஓர் உயர்குலப் பெண் ஆற்றில் மூழ்குகிறாள். சேரி இளைஞன் ஒருவன் அவளைக் காப்பாற்றுகின்றான. சனாதானிகள் செய்ந்நன்றி மறந்து அவன் சாதிச் சிறுமையை எண்ணிப் பழிக்கின்றனர். கையை வெட்ட உத்தரவு பிறக்கின்றது. அப்பெண் சாதியின் ஆதிக்கத்தை எண்ணிப் புலம்புகின்றாள். தீண்டாமை பற்றிப் பேசும் மக்களைப் பார்த்து,

**"சீதநிலவு தெளிக்கும் ஒளிவெள்ளம்**
**மோதி வரும்தென்றல், முகிலின் துளிவெள்ளம்**
**யாருக்கும் சொந்தம் அறிவரோ? கங்கைநதி**
**நீருக்கும் கோடை நிழலுக்கும் வையத்தில்**

**ஈசனவர் சொந்தம் என்று வழங்கி வைத்தான்"(நா.பா.தொகுதி1–பக்.எண் - 48)**

என்று வினா தொடுக்கின்றார். மக்களுக்கு இவ்வுலகில் அனைத்தும் பொது, யாரும் எவருக்கும் மேலோர், கீழோர் கிடையாது என்ற கருத்தினைப் பதிவு செய்துள்ளார். மனிதர்கள் அன்பை வழங்க வேண்டும், நெஞ்சையடக்க வேண்டும் என்று அறிவுரை வழங்குகின்றார். மேலும் சாதி வேறுபாடு காணுதல் பண்டைத் தமிழர் வழக்கம் அன்று, அது வேதியர் தொடர்பால் நம் நாட்டில் விளைந்த ஒரு கேடு. இது நமக்கு ஒரு இழுக்கு. (நல்வழிப்பா – 10) என்றும் சுட்டுகின்றார். அவ்வாறு மக்களைப் பேதம் பார்க்கும் நூலை எல்லாம் அழித்து விடுதலே மேல் என்கின்றார்.

மேலும் மூட நம்பிக்கையால் நம் மக்கள் அழிந்து போவதையும் தன் பாடல் வரிகள் மூலம் விளக்குகின்றார்.

**"தேங்கா யுடைத்து திருவா சகம்படித்தும்**
**பாங்காய் மணியடித்துப் பார்த்துவிட்டோம் - போங்காலம்**
**வந்துற்ற போது வழிமறித்துக் காப்பதற்கிங்**
**கெந்தம் செல்லு மிலை" (நல்வழிப்பா – 14)**

என்று சித்தர்களைப் போன்று தேங்காய், பழம் போன்றவற்றைக் கொண்டு பூசை செய்வதாலும், திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களைப் படிப்பதாலும் நம் மரணம் தள்ளி விடாது. இறப்பு என்பது அனைவருக்கும் பொதுவானதே. நம்மைக் கொண்டு செல்ல வரும் நாம் செல்வன் என்றோ, வறியன் என்றோ, இளைஞன் என்றோ, முதியன் என்றோ நம்மைப் பிரிப்பது கிடையாது. செல்லும் காலம் வந்து விட்டால் அனைவரும் காலனின் கட்டளைக்குப் பணிந்தே ஆகவேண்டும். எனவே வாழ்கின்ற காலத்து பூசை புனஸ்காரங்களில் பொழுதைப் போக்காது, நம்மால் இயன்ற அளவு பிறருக்கு உதவி புரிந்து வாழ வேண்டும் என்று சுட்டுகின்றார். மேலும் தெய்வத்திற்கு பொங்கலிட்டுத் தெய்வத்தைப் போற்றி ஒருவருக்கு நல்லவளம் வருமென்று எண்ணினால் அதில் எள்ளளவும் உண்மை கிடையாது. தன்னுடைய சொந்த முயற்சியில்லாமல், தெய்வம் காப்பாற்றும் என்று எண்ணுபவர் மூடர் என்று தெளிவுறுத்துகின்றார். எனவே நாம் வாழ்வில் நன்முறையில் வாழ்ந்து முன்னேற வேண்டுமென்றால், தெய்வத்தை நம்பாது, தன்கையை நம்பி பிறருக்கு உதவி செய்து வாழ வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

**பெண் முன்னேற்றம்**

பெண் முன்னேற்றம் சமூகத்தின் இன்றியமையாத ஓருறுப்பு. அது தடுக்கப்படும் சில சூழல்களையும் பாவலர் உள்ளத்தால் தாங்க இயலவில்லை. அவர்கள் மீது பரிவும், அன்பும் கொண்ட அவரது நெஞ்சம் இந்நிலை கண்டு நெகிழ்ந்து உருகியுள்ளது. பெண் அன்பின் வடிவம், தியாகத்தின் சிகரம், கனிவின் ஊற்று, கடமையின் களஞ்சியம், இல்லத்தின் அரசி, இன்னருளின் வழிகாட்டி இப்பண்புகளால் தெய்வீகமாய் ஒளிர்பவள்.

மேலும் இன்றைய சமூகத்தில் பெண்கள் தனியே வெளியே போவதே மிகக் கொடுமையான பின் விளைவுகளை உண்டாக்கக் கூடியதாய் உள்ளது. இந்நிலையை அன்றே கவிஞர், 'வாழ வைத்தான்' எனும் கதைப்பாடலில் சுட்டியுள்ளார். தன் காமப்பசிக்குப் பெண்கள் பயன்பட்டால் போதும் என்று நினைக்கின்ற பொறுப்பற்ற மனிதனின் கதை இது. இது கற்பனையாகவே இருப்பினும் இன்றைய சூழலில் பெரும்பாலும் நிகழ்கின்ற நிகழ்வாகவே இது காணப்படுகின்றது.

**"பண்பில்லா மாக்கள் பயிலும் ஒருநாட்டில்**
**பெண்கள் துணையின்றிச் செல்லல் பிழையென்றே" (நா.பா.தொகுதி1-பக்.எண்)**

என்று இன்றுள்ள நிலையினைத் தன் கவிதை வரிகளில் சுட்டிக் காட்டுகின்றார். என்று இன்றுள்ள நிலையினைத் தன் கவிதை வரிகளில் சுட்டிக் காட்டுகின்றார். ' பெண்டிர்க்கு உயர்வளி' (நெறிசூடி – 82) என்றும், சமுதாயத்தில் பெண்களுக்கும் பேச்சு சுதந்திரம் இருக்க வேண்டும் (நல்வழிப்பா – 5) என்றும் அத்தகைய நாடே முன்னேற்றப் பாதையில் செல்லும் என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் நல்வழிப்பா(நல்வழிப்பா – 16) பாடலில் ஆணுக்கும் பெண்ணக்கும் சரிநிகர் சமானமாய் அனைத்தும் இருத்தல் வேண்டும் என்று சுட்டுகின்றார். இவ்வாறு 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்' என்று பாரதி சுட்டியது போன்று, சமூகம் பெண்களுக்கும் சமத்துவம் கொடுத்தல் வேண்டும் என்று தனது பாடல் வரிகளில் சுட்டுகின்றார். பெண்கள் 'நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும் கொண்டோராய் திகழ வேண்டும் என்பதைத் தனது, 'பம்பாய் பஞ்சாங்கம்' என்ற கதைப்பாடலில் சுட்டுகின்றார்.

**வாழும் முறை**

மனிதன் மனிதனாக வாழ வேண்டிய முறை பற்றிய பல்வேறு கருத்துக்களைப் பாவலர் நாச்சியப்பன் தன் கவிதைகளில் பதிவு செய்துள்ளார். ஔவையார், பாரதியார், பாரதிதாசன் போன்றோர் தங்கள் சூடியில் மனிதன் வாழ வேண்டிய முறை பற்றிக் குறிப்பிட்டுள்ளது போன்று இவரும் தனது 'நெறிசூடி'யில் பல்வேறு நற்கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார். அதில் இடம்பெறுகின்ற 105 கருத்துக்களும் மக்களை வாழ்வில் மேன்மையடையச் செய்யும் கருத்துக்களே. அதில் இடம்பெறும் கருத்துக்களைப் பொதுவாக பின்வரும் வகையில் பாகுபடுத்தலாம்.

- வாழ்வில் அன்பை மேம்படுத்து
- இனிய முறையில் பேசு
- ஓயாது உழை
- தீமைக்குத் துணை போகாதே
- அறக்கருத்துக்களைப் பின்பற்று
- குறிக்கோளுடன் வாழ்
- தமிழுக்குப் பணி செய்
- சுயமரியாதையுடன் வாழ்
- உன்னை மேம்படுத்திக் கொள்
- எதற்கும் அஞ்சாதே

பெரும்பாலும் ஆத்திசூடியில் உள்ள கருத்துக்கள் அனைத்தும் இந்த பத்து பிரிவுகளின் கீழே அடங்கியுள்ளன. இப்பத்துக் கட்டளைகளை வாழ்வில் பின்பற்றினாலே நாம் வாழ்வில் மேன்மையடைந்து விடலாம் என்பதில் ஐயமில்லை.

தன்னம்பிக்கையே ஒரு மனிதனை மேம்படுத்துவது, வீழ்வது வெட்கமானது அன்று, ஆனால் தன்னம்பிக்கையின்றி வீழ்ந்து கிடப்பதே வெட்கரமானது. இக்கருத்தினை,

**"தன்னுறுதி யில்லானைத் தான்வெறுக்கு மிவ்வுலகம்**
**தன்னுறுதி யில்லா தவன்வாழ - இந்நாளில்**
**எச்சிறு செய்கையும் இல்லையே இல்லை கண்டீர்**
**பிச்சைத் தொழிலிற் பிற" (நல்வழிப்பா – 8)**

என்ற பாடலின் மூலம் சுட்டுகின்றார். பிறருக்கு உதவி செய்து வாழும் வாழ்வே உன்னதமானது. அத்தகைய வாழ்வினையே மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு பசித்தவர்களுக்குச் சோறிட்டு வாழ்வாரை வாழ்க (நல்வழிப்பா – 9) என்று வாழ்த்துகின்றார்.

அனைத்து உயிர்கள் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்பது பாவலர் நாச்சியப்பனின் கருத்து. எனவே கருணையை வளர்த்துக் கொள் என்றும், புலால் உணவினை நீக்குக என்றும் வேண்டுகின்றார். (நல்வழிப்பா–45)

பொய் சொல்லாதீர்கள் (நல்வழிப்பா–18), காரணமின்றி உங்களை அடிமைப் படுத்துபவர்களிடம் அடிமையாகாதீர்கள் (நல்வழிப்பா–8), அனைவரிடமும் அன்பு செலுத்தி இன்சொல்லால் உலகை வசமாக்குங்கள் (நல்வழிப்பா–19) மூடநம்பிக்கைகளுக்கு ஆளாகாதீர்கள், (நல்வழிப்பா–22,25,26) போன்ற பல்வேறு கருத்துக்களையும், வாழும் முறைகளையும் நல்வழிப்பாவில் 44 பாடல்களின் வழி விளக்கியுள்ளார்.

அதுமட்டுமின்றி பாவலரின் உள்ளம் இயல்பாகவே தாய்மொழிப்பற்று உடையது. எனவே மனிதன் வாழும் முறை பற்றிக் குறிப்பிடுமிடத்து கூட, தாய்மொழியைப் பேணி வாழுங்கள் என்றே குறிப்பிடுகின்றார்.

**"தன்மொழியிற் பற்றில்லா தானை யுவகெல்லாம்**
**புன்மொழியால் தூற்றும் புவிமீதில் - அன்னோன்**
**பெரும்பார மாவான் பிறருந்தாம் நம்பற்**
**கருகதை யற்றவனாங் காண்"**

என்று தாய்மொழி மீது பற்றில்லாதவன், இவ்வுலகில் வாழ்வதற்கே அருகதையற்றவன் என்று குறிப்பிடுகின்றார். மேலும் தன்னம்பிக்கை இல்லாதவன், தாய்மொழியைப் போற்றாதவன், தன்மானம் போற்றாதவன் ஆகிய இம்மூவரும் இவ்வுலகிற்கே பெரும்பகை போன்றவர்கள் (நல்வழிப்பா–21) என்கின்றார்.

கல்விச் செல்வமே இவ்வுலகில் தலையாய செல்வம் போன்றது, அது ஒன்றே நமக்கு நிலையான புகழைத்தரக் கூடியது(நல்வழிப்பா–34). எனவே எப்பாடுபட்டினும் கல்வியறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்கின்றார். மேலும் நாம் பிறருக்கு அறிவுரை சொல்லும் முன் அவ்வறிவுரை கூற நாம் தகுதியானவர் தானா என்பதை முதலில் ஆராய்ந்து கொள்ள வேண்டும். அதனை விட்டு ஊருக்கு உபதேசம் வழங்கி விட்டு, அதனைத் தன் வாழ்வில் கடைபிடிக்காதவர்களை நாயிற் கடையனாய் (நல்வழிப்பா–35) குறிப்பிடுகின்றார். அதனைப் போன்றே நாம் ஒருவருக்கு அறிவுரை வழங்குகின்றோமெனின் அறிவுரை கேட்பவனின் தரம் அறிந்து கூற வேண்டும். இல்லையெனில் அது கல்லுக்குச் சொன்ன கதை என்றாகி விடும்.

இவ்வாறு பாவலர் நாச்சியப்பன் தன் கவிதைகளில் மனிதன் சமுதாயத்தில் வாழ வேண்டிய முறை குறித்தும், தனி மனித நிலையில் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டிய நிலை குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

# இலக்கியங்களில் தனிமனித அறச்சிந்தனைகள்

***முனைவர் அ.அன்னம்மாள்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்-1.

**முன்னுரை**

இவ்வுலகில் இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களுள் உயர்ந்ததாகக் கருதப்படுவது மனித இனம் ஒன்றே ஆகும். உலகில் வாழும் மக்களிடையே சொல், செயல், மனம், எண்ணம், பெருந்தகைவு இவைகளில் இருந்து வழுவாமல் ஒருவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதே "தனிமனித அறம்" ஆகும்.

ஒரு செயலைச் செய்யும் பொழுது முன்னோர்களுடைய வழிநிலைகளைப் பின்பற்றி தனது வாழ்க்கையை ஒருவன் நடைமுறைப் படுத்தி வாழ்ந்து வந்தால் இச்சமுதாயத்தில் அவன் மனிதருள் சிறந்தவராகக் கருதப்படுவான். சான்றோர் கூறிய நெறிமுறைகளின் படி தம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் அதுவே சிறந்த வாழ்வாகும். அதுவே தனி மனித அறத்திற்கு ஏற்றது என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தனிமனித அறம்**

தொல்காப்பியர் அகத்திணையியலில் தனிமனித நிகழ்ச்சிகளைக் கூறும்பொழுது தலைவன், தலைவியுடைய இறுதிகால வாழ்க்கையை,

**"காமஞ் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"**

எனக் கூறுவதைக் காணமுடிகிறது.

ஒரு செயலைச் செய்வதற்குக் கருவியாக அமையக்கூடியவன் மனிதன் ஆவான். அச்செயலைச் செய்யும் தகுதியுடையவனிடமே அச்செயலை ஒப்படைக்க வேண்டும். அவனை விடுத்து மற்றவர்களிடம் ஒப்படைக்கக்கூடாது என்பதை

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்"**

என்னும் குறள் உணர்த்தும்.

இலக்கியம் ஒருவன், ஒருத்தி என்ற இல்லறக் கோட்பாட்டினையும் சுட்டிச் செல்கிறது. இதுவும் ஒரு தனிமனித ஒழுக்கமாகும். தனிமனித வாழ்வினை நோக்கும்பொழுது ஒவ்வொருவரும் தமது ஆழ்மனதில் ஓர் எண்ணத்தைக் கொண்டிருப்பதை அறியலாம். தனிமனிதன் தனக்கு விதிக்கப்பட்டுள்ள வரையறையை மீறாமல் நல்ல நெறியைப் பின்பற்றி வாழ வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்ததே தனிமனித அறமாகும்.

அறத்தோடு வாழ்வதால் வரும் இன்பமே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை புகழும் இல்லாதவை என்று கூறியுள்ளார் வள்ளுவர். இதனை,

**"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்**
**புறத்தே புகழும் இல"**

என்ற குறள் உணர்த்துகிறது.

**ஒழுக்க நெறி தவறாமை**

ஒழுக்கத்தினால் எல்லோரும் மேன்மை அடைவர். ஒழுக்கம் தவறுதலால் அடையத் தகாத பெரும் பழியை அடைவர் என்று வள்ளுவர் கூறியுள்ளார். இதனை

**"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி"**

என்னும் குறள் உணர்த்தும்.

மனிதன் தனக்கு வரையறை செய்து கொண்ட ஒழுக்க நிலையிலிருந்து மாறாமல் வாழ்ந்து வருவதே ஒழுக்க நெறி தவறாமை ஆகும். அவ்வாறு வாழ்ந்து வந்தால் சீரும் சிறப்புமாக வாழ முடியும். மனிதன் தன்னுடைய நெறியிலிருந்து தவறாமல் இருக்க வேண்டும் என்ற கருத்தைப் பல இலக்கியப் பாடல்கள் வற்புறுத்தி உள்ளன.

களவு ஒழுக்கத்தில் உயிரைக் காக்க உதவி புரிந்த தலைமகனுக்குத் தலைமகளைக் கொடுப்பது மரபு. அவளுடைய தாய், தந்தையர் அவ்வாறு செய்யாமல் தன் மகளைப் பிறர்க்குக் கொடுக்க முயல்கின்றனர். இதனால் இயற்கை நிகழ்வுகளும் தத்தம் நிலையில் இருந்து கெட்டுப் பயன் தராமல் போகும் என்பதை செவிலிக்குக்கூறுகிறாள் தோழி. இதனை,

**"சிறுகுடி யீரே! சிறுகுடி யீரே!**
**வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன்தொடா**
**கொல்லை குரல்வாங்கி ஈனா மலைவாழ்நர்**
**அல்ல புரிந்து ஒழுகலான்"**

என்ற கலித்தொகை அடிகளின் வழி அறியமுடிகிறது. தாய் தந்தையர் அவர்களுடைய ஒழுக்க நிலையிலிருந்து மாறாமல் இருக்க வேண்டும் என்பதை இப்பாடல் வலியுறுத்துகிறது.

தலைவன் தலைவி கொண்ட களவு மணம் அறநெறியோடு நடப்பது என்னும் மரபினை அறியாத ஊரார் அலர் தூற்றி ஆரவாரித்தனர். இருந்தாலும் தலைவன், தலைவி ஆகிய இருவரும் தமக்குரிய நெறிகளிலிருந்து தவறாமல் களவு வாழ்க்கையில் ஈடுபட்டனர். இவர்களது களவு ஒழுக்கத்தை அறிந்த தாய், தலைவனைப் பிரிதலால் தலைவி இறந்துபடுவாள் என்பதை அறிந்து

தன்குடிப்பெருமை கெடாவண்ணம் அவளைக் காவற்படுத்தினாள். அன்னையானவள் குடிப்பெருமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஒழுக்க நிலையிலிருந்து மாறாது ஒழுகி வந்தாள் என்பதை,

**"அழுங்கல் ஊரோ அறன்இன்று அதனால்**
**அறன்இல் அன்னை அருங்கடிப் படுப்ப"**

என்ற நற்றிணைப்பாடல் அடிகள் உணர்த்தும்.

வெயிலின் கொடுமையால் வாடிக்கிடந்த உயிர்கள் தம் தொழிலை மேற்கொள்வதற்கு மழை தக்க நேரத்தில் பெய்து உதவியது போல, உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் தத்தம் தொழிலை முறையோடு நெறிதவறாமல் செய்தால் அதன் பயனாக நன்மைகள் வந்து சேரும் என்பதை,

**"அறத்தொடு வருந்திய அல்குதொழில் கொளீஇய"**

என்ற நற்றிணைப் பாடல் அடியால் அறியலாம்.

தலைவன், தலைவி இருவரும் களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டனர். தலைவன், தலைவியிடம் விரைவில் மணந்து கொள்வேன் என்று உறுதி கூறினான். அவன் சொன்ன சொல்லில் இருந்து மாறுபடத் தொடங்கினான். தலைவியை மணம் செய்வதற்குக் காலம் நீட்டித்தான். இதனை அறிந்த தோழியானவள், "தலைவன் சொன்ன சொல் தவறாதவன். முறைப்படி உன்னைப் பெண் கேட்டு மணந்து கொள்வான். அவன் எடுத்த செயல் அறநெறிப்பட்டது. நீதி நூல்களை முறைப்படி கற்றோர் அம்முறையிலிருந்து தவறாமல் ஒழுகுவது போல மணம் நிகழ்ந்த பின்னரே இல்லறம் நடத்த வேண்டும் என்ற நெறியிலிருந்து மாறமாட்டான்" என்கின்றாள். இதனை,

**"திறவோர் செய்வினை அறவதாகும்"**

என்ற குறுந்தொகைப்பாடல் அடி புலப்படுத்தும். ஒருவன் திருமணம் செய்த பின்னரே இல்வாழ்க்கை நடத்த வேண்டும் என்னும் நெறி வலியுறுத்தப்படுகிறது.

சங்க காலத்தில் இந்நெறி பயன்படுத்தப்பட்டு இருந்தாலும், வழி வழியாக இக்காலத்திலும் பயன்படுத்தப்பட்டு வருவதை நாம் அறியமுடிகிறது. இன்றும் களவு வாழ்க்கை நடத்திய பொழுதும் தாலி கட்டித் திருமணம் செய்த பிறகே இல்வாழ்க்கை நடத்த வேண்டும் என்னும் ஒழுக்க நெறியைக் காணமுடிகிறது.

நாம் பலவகையான செயல்களைச் செய்கின்றோம். ஒரு செயலைச் செய்யும் பொழுது முன்னர் செய்ய வேண்டியவை எவை, பின்னர் செய்ய வேண்டியவை எவை எனத் திட்டமிட்டு அம்மரபிலிருந்து மாறாமல் அச்செயலைச் செய்ய வேண்டும் என்ற அறக்கருத்தை இலக்கியங்களில் காணமுடிகின்றது.

தலைவன், தலைவியை விட்டுப்பிரிந்து பொருள் தேடச் செல்வதற்கு எண்ணுகிறான். பின்பு தன் பிரிவை ஆற்றமாட்டாள் என அறிந்த தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறும் பொழுது, “முன்னர் தோன்றினாரை முன் கொல்வதும், பின் தோன்றினாரைப் பின்னர் கொல்வதும் மரபு. அம்மரபிலிருந்து மாறி இளைஞர், பெண்கள், பெரியவர் எனச்சிறிதும் முறையின்றிக் கொல்லுதல் அறமற்ற செயலாகும். அந்த அறமற்ற செயலைச் செய்பவன் கூற்றுவன். அவன் தொழிலை அறிந்தவர்கள் பெரும் செல்வம் கிடைத்தாலும் பொருள் தேடச் செல்லமாட்டார்கள் என்று கூறுகிறான். இதனை,

**“உறன்முறை மரபிற் கூற்றத்து**

**அறனில் கோணற்கு அறிந்திசினோரே”**

என்ற அடிகள் வழி அறியலாம். ஒரு செயலைச் செய்யும் பொழுது முறையோடு நெறி தவறாமல் செய்ய வேண்டும் என்பதையும் அறிய முடிகிறது.

**துன்பம் செய்யாதிருத்தல்**

பிறர் நமக்குத் துன்பம் செய்தாலும் நாம் அவருக்கு நல்லது செய்தல் வேண்டும். அதைவிட்டுப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எந்தத் துன்பத்தையும் செய்தல் கூடாது.

ஒருவர் துன்பத்தால் அவதிப்படும் பொழுது அத்துன்பத்தை நீக்கும் வகையில் அவருக்கு நல்லது செய்தல் வேண்டும். அவ்வாறு நல்லது செய்யாவிட்டாலும் எந்தத் தீமையும் செய்யக்கூடாது. இதனை

**“நல்லது செய்தல் ஆற்றீராயினும்**

**அல்லது செய்தல் ஓம்புமின்”**

என்ற புறநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது. பிறர்க்குத் துன்பம் செய்யக்கூடாது என்பதும் அறத்தின் வகைப்பட்டது என்பது இதனால் புலப்படுகிறது.

தலைவன் பரத்தமை ஒழுக்கம் இன்றி இருந்தான். அவனுக்கு அவ்வொழுக்கம் உளதாக எண்ணித் தலைவி ஊடல் கொண்டாள். அவளது புலவியை நீக்கிப் புணர்ந்த தலைவன் தன்னுள் கூறும்பொழுது பொய்கையின் குளிர்ச்சியை விட இவள் குளிர்ச்சியானவள். காரணம் இவள் பொய்கை ஊரனின் மகள் என்றான். வெயில் வெம்மையாகிய துன்பத்தைத் தந்தாலும் பொய்கையானது தம்மை நாடி வருபவர்க்கு எவ்விதக் கெடுதலும் செய்யாமல் இனிமை தரும் வகையில் குளிர்ச்சியைத் தருகிறது. இதனை,

**“பொய்கை ஊரன் மகளிவள்”**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் அடி உணர்த்துகிறது. பிறர் நமக்குத் துன்பம் செய்தாலும் எந்தக் கெடுதலும் செய்யாமல் இனியவை செய்து ஒழுகும் சால்புடைமையே சிறந்தது என்பதை இதனால் அறியலாம்.தலைவன் தலைவியை மணந்து கொள்ளாமல் வரைவு நீட்டித்தான். இதனால் தலைவி ஒருநாள் அவன் வரவை ஏற்காது இருந்தாள். இதனைத் தோழியிடம் கூறும்பொழுது, தோழியே தலைவன் மணந்து கொள்ளாமல் வரைவு நீட்டிப்பதால் எனக்குத் துன்பம் ஏற்படுகின்றது. அத்துன்பத்தை நீக்குவது ஆடவரின் செயல். அச்செயலைச் செய்யாது களவு ஒழுக்கம் புரிய வருகிறான். இவன் ஒழுக்கமில்லாதவன் என்று கூறுகிறாள். இதனை,

**“அம்ம வாழி தோழி யான் இன்று**

**அறனிலாளன் கண்டபொழுது”**

என்று ஐங்குறுநூற்றுப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

இதன்வழி பிறர்க்குத் துன்பம் ஏற்படும் பொழுது அத்துன்பத்தைக் களையாது நாமும் அவருக்குத் துன்பத்தைச் செய்வது முறையன்று. பிறர் துன்பம் அடையும் பொழுது உதவி செய்யாவிட்டாலும் எந்தக் கெடுதலும் செய்யாது இருப்பதே சிறந்த அறம் என்பதை இப்பாடலால் அறியலாம்.

தலைவன், தலைவியை மணந்து கொள்ளாமல் காலம் நீட்டித்தான். பகற்பொழுதில் வந்து போய்க் கொண்டிருந்தான். அவ்வாறு வந்த ஒரு நாளில் தோழி அவனைப்பார்த்து தனக்கு வலிமையை அளிக்கும் என்று எண்ணித் தம் துன்பம் தீர தெய்வத்தை வழிபடுவர். அத்தெய்வம் அவர் துன்பத்தைப் போக்காமல் நெஞ்சம் வருந்தும் அளவிற்கு வருத்தத்தைக் கொடுத்தது போல் நின்னை, தனக்குப் பாதுகாப்பு என்று வழிபட்ட என் தோழிக்கு நீ செய்த

பழியால் எங்கும் பரவி அலர் தூற்றுவதாய் அமைந்து வருத்தத்தைத் தந்தது என்பாள். இதனை

**“வழிபட்ட தெய்வம்தான் வலிஎனச் சார்ந்தார்கண்**

**கழியும் நோய் கைம்மிக அணங்கு ஆகியது”**

என்ற கலித்தொகைப் பாடலால் அறியலாம். இக்கருத்தின் வழி தம்மை நாடி வருபவர்க்கு நல்லது செய்யாவிட்டாலும் எந்தத்துன்பத்தையும் கொடுக்கக்கூடாது என்ற கருத்து வெளிப்படுவதை அறிய முடிகின்றது.

தலைவன் இரவுக்குறியின் வழி தலைவியைச் சந்தித்துப் பேசி இன்புறுவதற்கு வந்தான். தலைவியின் வீட்டுக் கதவைத் தட்டித் தன் வரவைத் தெரிவித்தான். அப்பொழுது அவன் வரவை அறிந்த தலைவி வருந்தினாள். அவளது வருத்தத்தின் காரணத்தை உணராத செவிலி, அச்சத்தால் அவ்வாறு வருந்தினாள் எனக்கருதி இறுகத் தழுவிக் கொண்டாள்.

தலைவனும், தலைவியும் சந்தித்துப் பேசும் இன்பத்திற்குத் தடை செய்து துன்புறுத்தும் செயலைச் செய்பவர்கள் கொடியவர்கள். அக்கொடிய செயலைச் செய்யக்கூடாது. அவர்கள் இன்பம் எய்துவதற்குத் துணை புரியாவிட்டாலும், இன்பத்திற்குத் தடையாக இருக்கக்கூடாது. இதனை,

**“உயங்குதொறு முயங்கும் அறனில் யாயே”**

என்ற குறுந்தொகைப்பாடல் அடி வழி அறியலாம்.

களவு, கற்பு ஆகிய இரண்டு ஒழுக்கமும் மகளிர்க்கு அறம் என்பதை உணர்ந்த சான்றோர் பிறர்க்கு அலராகிய பழி வரும் செயலைச் செய்யமாட்டார். அவ்வாறு செய்வராயின் அவர் அறப்பண்பு இல்லாதவராவார். இதனை,

**“அறிந்தோர் அறனிலர் என்றலின் சிறந்தோர்**

**இன்னுயிர் கழியினும் நனி இன்னாதே”**

என்ற நற்றிணைப்பாடல் அடிகள் உணர்த்தும். உலகத்தில் சிறந்தவர், தம் உயிர் போவதாக இருந்தாலும் பிறருக்கு பழி வந்து சேரும் வகையில் எந்தச் செயலையும் செய்யமாட்டார். நல்லதையே செய்வார் என்ற அறக்கருத்து வெளிப்படுவதை அறியமுடிகின்றது.

மிகுந்த காமத்தால் தலைவன் ஒருவன் தன் காதலியைத் தழுவிக் கொண்டு, எனக்கு இனிமை தருவதால் உன்னை முயங்கினேன் என்று கூறுகிறான். அதற்கு அவளோ தனக்கு இனிமை தருகிறது என்தற்காக வலிதிற் சென்று பிறர்க்கு வேண்டாத செயலைச் செய்தல் நல்லதாகுமோ? என்று கேட்டாள். காதலினால் நிகழும் இந்த உரையாடலை

**“தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா**

**செய்வது நன்றாமோ மற்று”**

என்ற கலித்தொகைப்பாடல் அடி வழி அறியலாம்.

தனக்கு இனிமை தருகிறது என்பதற்காக, பிறர்க்குத் துன்பம் தரக்கூடிய செயலைச் செய்யக்கூடாது என்ற அறக்கருத்தை இப்பாடல் புலப்படுத்தும்.

**முடிவுரை**

ஒழுகத்தில் சிறந்ததும் அறத்தில் சிறந்ததும் தனிமனித அறமே ஆகும். தனிமனித அறத்தைப் பின்பற்றி வாழ்ந்தால் இந்த சமுதாயம் சிறப்படையும் என்பதில் ஐயமில்லை. தனிமனித அறமும் ஒழுக்கமும் கெட்டுப்போகும் போது சமுதாயம் பல இன்னல்களை சந்திக்க நேரிடுகிறது. ஆகவே சான்றோர்கள் கூறியுள்ள அறக்கருத்துகளின் படி வாழ்வதே சிறப்பாகும்.

# கம்பர் காட்டும் வாழ்வியல் நெறிகள்

***முனைவர் சி.வடிவேலன்** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சீர்காழி-புத்தூர், நாகை மாவட்டம்.

வாழ்வியல் நெறி என்பது செம்மையான வாழ்க்கை முறை எனலாம். இல்வாழ்வானுக்குரிய பண்பாக வள்ளுவர் அன்பு, அறம் ஆகியவற்றைக் கூறுகிறார். நற்பண்பு கொண்ட இச்சான்றோர் பண்பாக அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகியவற்றை வள்ளுவர் காட்டுகிறார். பெண்களுக்குரிய வாழ்வியல் பண்பாக அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, விருந்தோம்பல், கணவனைத் தெய்வமாகக் கொண்டு ஒழுகுதல் முதலிய பண்புகளைக் காட்டுகிறார். இத்தகு வாழ்வியல் நெறிகளைக் கருவிலே திருவுடைய கம்பர் தமது காப்பியமான கம்பராமாயணத்தில் 'இருள் கடிந்தெழுகின்ற ஞாயிறே போல' உயர்த்தி காட்டுகிறார். இதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கல்வி-பெண்மை சிறக்கச் செய்கிறது**

இல்லறம் இனிமை பெற, இல்வாள் அறிவும், பண்பும் பெற கல்வியே அடிப்படை ஆகும். கல்வி பெற்ற பெண்டிரே இல்லறப் பண்பை உணர்ந்து இனிது நடத்தி செல்ல முடியும். வறுமையால் வாடி வந்தவர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து உதவினர். விருந்தினர் அருந்தி மகிழ உணவை அளித்தனர். கோசல நாட்டு குடும்பங்கள் இவ்வாறு குறைவின்றி வாழ்ந்தன என்று கோசல நாட்டைப் பற்றி கூறும் போது கம்பர் கூறுகிறார். இதனை,

**"பெரும் தடங்கண் பிறை நுதலார்க்கெலாம்**
**பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்**
**வருந்தி வந்தவர்க்கு ஈதலும்**
**வைகலும் விருந்து அன்றி விளைவன யாவையே"1**

என்று கம்பர் கூறுகிறார்.

**காமம் வெளிப்படுத்தா பெண்மை**

காமம் கொண்ட பெண்கள் அன்பை, தாம் வெளிப்படுத்துதல் இல்லை என்னும் தமிழர் தம் உயரிய பண்பை பஞ்வடியில் இராமனைக் கண்டு காமுற்ற சூர் ப்பனகையின் சொற்களில் கம்பர் அழகாகக் காட்டுகிறார்.

**"தாம் உறு காமத் தன்மை தாங்களே உரைப்பது**
**ஆம் எனில் ஆவது அன்றால் அருங் குல மகளிர்க்கு அம்ம"2**

என்று கம்பர் தம் கவிதை வரிகளில் புலப்படுத்துகிறார்.

**அன்பே ஆக்கம் தரும்**

இராமனை முடிசூட்டு விழாவிற்கு ஆயத்தப்படுத்தும்போது வசிட்டர் பல அறிவுரைகள் கூறுகிறார். அதாவது உலகனைத்துக்கும் பொதுவான பெருமையான அன்பினைப் பற்றிக் கூறும்போது, 'அன்பினைத் தவிர ஆக்கம் தருவது வேறொன்றில்லை' என்பதாக காட்டுகிறார். இதனை கம்பர்

**"முன்பு பின்பு இன்றி மூவுலத்திலும்**
**அன்பின் நல்லது ஓர் ஆக்கம் உண்டாகுமோ"3**

என்று கூறுகிறார்.

**பிறர்மனை நயவாப் பண்பு**

தசரதனுக்கு மூன்று மனைவியர், இராவணனுக்குக் கணக்கில்லாத மனைவியர் என்று கம்பர் கூறினாலும், தசரதன் மகன் இராமன் ஏகபத்தினி விரதனாக இருந்ததைக் கம்பர் காட்டுகிறார். இராவணன் சீதை மீது ஆசை கொண்டு பிறர் மனை நயந்த செயலை,

**"வேறு ஒரு குலத்தால் தேவியை நயந்து சிறை வைத்த செயல் நன்றோ"4**

எனக் கும்பகர்ணன் கடிந்தாலும்,

**"கிளையொடு மடியாது அசைவுஇல் கற்பின் அவ்அணங்கை விட்டருளுதி"5**

எனவும் கூறுகிறார்.

**"வூண்ணங் வேண்டலும் சீதையை விடுதி ஆயின் தீரும் இத்தீமை"6**

என மாலியவான் விளக்கவும் தமிழரின் பிறர்மனை நயவாப்பண்பை வெளிப்படுத்துகின்றது.

**சாதி வேறுபாடற்ற தூய நட்பு**

அன்பாலும், நட்பாலும் ஒன்று சேர்ந்து உற்றுழி உதவிகள் பெறும் உயர்ந்த நிலையை இராமனின் நட்புச் சூழல் நமக்குப் புலப்படுத்துகிறது. அரச குலத்தைச் சார்ந்த இராமன் வேடர் குல குகனுடன் நட்பு கொண்டார். குரங்கினச் சுக்கிரீவனுடன் நட்பு கொண்டார். ஆயினும் நல்லானாகிய குகனைப் பார்த்து இராமன், 'என்னுயிர் அனையாய் நீ' என்று போற்றுகிறார். மேலும்,

**"குகனொடும் ஐவர் ஆனோம் முன்புபின் குன்று சூழ்வார்**

**மகனொடும் அறுவர் ஆனோம் எம்முறை அன்பின் வந்த**
**அகன்அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்"7**

என்று உடன்பிறந்தவராக நோக்கும் உயர் பண்பே உண்மையான நட்புக்கு இலக்கணமாக காட்டுகிறார். அன்பும் தூய உள்ளமும் சாதி வேற்றுமையை அடித்து வீழ்த்திய நிலையை இதன் மூலம் நாம் காணலாம்.

**அறம் எனும் பண்பு மேன்மை**

அன்பினால் உலகையாண்ட இராமனின் அறத்தின் வெற்றியைக் கருவாகக் கொண்டு இயங்குகிறது கம்பராமாயணக் காப்பியம். அறம் என்பது ஆற்றல் வாய்ந்தது. அது என்றும் நன்மையே தரும் என்பதனை,

**"ஆய்வினை உடையார் ஆகி அறம் பிழையாதார்க்கு எல்லாம்**
**எய்வன நலனெ அன்றி இறுதி வந்து அடைவது உண்டோ"8**

என்று வாழ்வின் அறம் நிலைக்கும் வரை வாழ்நாளில் இறுதி வருவதில்லை என்பதனை இராமன் சுக்கீரவனுக்கு அறத்தினது இறுதி, வாழ்நாட்கு இறுதி, அஃது உறுதி என்று அறிவுறுத்தியதினின்று அறத்தின் சிறப்பை அறியலாம். அறம் அன்பினைப் போன்றே அக உள்ளத்தால் ஏற்படுவது ஆகும்.

**அடக்கம் எனும் பண்பு**

மனிதனின் பண்பு நிலைகள் பலவற்றில் அகத்தில் நிலை கொள்வன அடக்கம், பொறுமை, உண்மை போன்ற பலவாகும். கம்பர் அடக்கத்தின் சிகரமாக விளங்குகிறார். தன் புலமையில் ஆழ்ந்த பொருளுடைய சொற்களை நொய்தின் நொய்ய சொல் எனவும், பெருஞ்சுவைக் காப்பியம் இயற்றிய தன் செயலைப் பாற்கடலைப் பூனை நக்கியதாகவும், சிறுவன் ஒருவன் கீறலாகவும் கூறுவதால் அவருடைய அடக்கப்பண்பு வெளிப்படுவதைக் காணலாம். பேராற்றல் படைத்தோரிடம் இயல்பாக அமையும் உலகியல் பண்பாக இது அமைந்துள்ளதை அறியலாம்.

எத்துணை உயர்வும் பெருமையும் உள்ள போதும் அப்பெருமையைப் பேசாத அடக்க நிலையைச் சுக்கிரீவன் இராமனுக்குக் கூறிய ஆறுதல் மொழிகளால் அறியலாம். அதாவது 'பெருமையோர் ஆயினும் பெருமை பேசலார், கருமமே அல்லது பிரிதென் கண்டது' என்கிறார். இத்தகைய அடக்க உணர்வுக்கு எடுத்துக்காட்டாக அனுமனைக் கூறலாம். சீதையைத் தேடி சென்ற அனுமன் உறக்க நிலையிலிருந்த இராவணனைக் கண்ட போது அவனை அழிக்க வேண்டுமென எழுந்த மன உணர்வை இராமன் பணி அன்று என்றெண்ணி அடக்கிக் கொள்கிறான்.

**பொறையெனும் பண்பு**

பொறையுடைமை பண்பு இவ்வுலகுக்கு வேண்டிய ஒன்றாகும். தவத்துறையைச் சார்ந்த முனிவருக்கு மட்டுமின்றிப் பொறுமை அனைவருக்கும் பொதுவானதும் இன்றியமையாததும் ஆகும். சமுதாய வாழ்வினர்க்கும், தோள் வலிமையைத் துணையாகக் கொண்ட வீரனுக்கும், ஆளும் அரசுக்கும் மிக வேண்டிய பண்பாகும். இலங்கைக்குத் தூது விடும் எண்ணத்தை இலக்குவன் மறுத்தபோது அங்கதனைத் தூதுவிடும் சிந்தனையைத் தருகிறான்.

**"புயத்துறை வலியரேனும் பொறையொடும் பொருந்தி வாழ்தல்**
**சயத்துறை அறனும் அஃதே என்று இவை சமையச் சொன்னான்"[9]**

என்னும் அடிகளால் அறியலாம்.

**வாய்மைப் பண்பு**

உண்மை என்பது உள்ளத்தின் பண்பாக அமைவது, சொல் நிலையில் அது வாய்மையாக வெளிப்படும். அரசு நன்னதே எனக் கூறிய பரதனை அரசாளுமாறு இராமன் ஆணையிடுமிடத்து வாய்மையின் தன்மை வலியுறுத்தப் பெறுவதை,

**"வாய்மை என்னும் ஈதுஅன்றி வையகம்**
**தூய்மை என்றும் ஒன்று உண்மை சொல்லுமொ**
**தீமை தான் அதில் தீர்தல் அன்றியே**
**ஆய் மெய்யாக வேறு அறையல் ஆவதே"10**

மனத்தூய்மை வாய்மையால் காணப்பெறும் என்னும் அறநூலின் கருத்து இங்கு வலியுறுத்தப்படுகிறது. யாதொன்றும் தீமை இலாத சொலல் ஆன வாய்மைப் பாங்கும் இங்கு புலப்படுகிறது. 'துறந்திலேன் மெய்மை எய்தும் வெய்ம்மையே துறப்பது அல்லால் பொய்மை உரைத்திலேன்' என்னும் வீடணண் உரையும் உள்ளத்தால் உண்மையொளி வாக்கினில் வெளிப்படுவதைப் காட்டுகிறது.

**நன்றியறிதல் பண்பு**

உள்ளத்தின் சிறந்த பண்பாக நன்றியுணர்வு அமைகின்றது. நன்றியறிதலாலும் நன்றி மறவாமையாலும் இது வெளிப்படுகிறது. சடையப்ப வள்ளலிடம் பெற்ற நன்மைகள் பற்றிய கம்பனின் நன்றியுணர்வு காப்பியம் முழுவதும் பரந்து காணப்படுகிறது. பிறிதொருவரிடம் தான் அடைந்த தினைத்துணை உதவியையும், பனையளவாகப் போற்றும் வாழ்வியல் கூறாகப் பொருந்தும் தன்மையை இதனின்றும் உணரலாம். நன்றியுணர்வு இல்லாதவர்கள் என்றும் சிறியவராகக் கருதப் பெறுகின்றனர். இறந்த வாலியின் மீது விழுந்து புலம்பிய தாரை வாலியின் உதவியால் அமுதத்தைப் பெற்ற தேவனான ராமன் நன்றியுணர்வின்றி அவன் உயிர் கவர்ந்ததாகப் பேசுமிடத்தில் இவ்வெண்ணம் 'சிறியரோ உபகாரலம் சிந்தியார்" என வெளிப்படுகின்றது. செய்ந்நன்றி உணர்தலும், அதற்குக் கைமாறாக உயிரையே கொடுத்தலும், அறமாக கருதப்படுவதை அனுமன் கூற்று விளக்குவதை

உதவாமல் ஒருவன் செய்த உதவிக்குக் கைம்மாறு உண்டோ வயிற்றோ, சிதையாத செலவில் அன்னான் முன்கென்று ஆவி உலவானல் என்பதனால் அறியலாம்.

**அடைக்கலம் நல்கும் பண்பு**

உதவி நாடி வந்தவர்க்கு உறுதுணையாக நின்று அடைக்கலம் அளித்தலும் உயர்ந்த அறப்பண்பாகக் கருதப்பெறுகிறது. பகைவன் தம்பி ஆயினும் அடைக்கலம் வேண்டி அண்டியவனை ஏற்று பாதுகாப்பளித்தது உயரிய பண்பு இராமனிடம் அமைகிறது. வீடணன் அடைக்கலம் பற்றி இராமனின் அருகிருந்தாரிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் போது மாருதி ஆற்றிய பேருரை,

**"ஆவத்தின் வந்து அபயம் என்றானை அயர்த்து அகல விடுதி**
**ஆயின் கூவத்தின் சிறுபுனலைக் கடல் அயிர்த்தது ஒவ்வாதோ"11**

என அமைந்துள்ள அடிகளால் இவ்வெண்ணம் வெளிப்படுவதைக் காணலாம்.

**இன்சொல் பேசும் பண்பு**

சொல்நிலையின் அறமாக இனியவை கூறல் பண்பு அமைகிறது. நெஞ்சின் ஆபத்தால் எழும் அன்பு இனிய சொற்களால் வெளிப்படுகிறது. அவ்வாறு வெளிப்படா நிலையிலும், பகை சூழலின் போது கூட இன்மொழி இயம்பல் உயர் அறமாகக் கருதப்படுகிறது. இராமன் சுக்கிரீவனுக்குக் கூறும் அறிவுரையில் இவ்வுயர்பண்பு நிலையைப்

**"பகையுடைச் சிந்தையார்க்குச் சயன் உறுபண்பின் தீரா**
**நகையுடை முகத்தை ஆகு இன் உரை நல்கு நாவார்"12**

என்று காட்டுகிறார். 'வைவன் வந்த போதும் வசை அல இனிய கூறல்' என இனியவை கூறல் பண்பை உலகப் பொதுமையின் அறமாக ஆக்குகிறான் கம்பன்.

கம்பராமாயணத்தில் இருந்த திருப்பங்கள் காமத்தால் உண்டாகின்றன. கைகேயின் மீது தசரதன் கொண்ட காமத்தின் காரணமாக இராமன் காடேகக் காரணமாகின்றது. கானக வாழ்வின் பத்தாண்டு அமைதியும், பஞ்சவடியின் இனிய வாழ்வும் முடிவெய்த காமம் காரணமாகிறது. மறுநாள் முடிசூட்டப்பெற்ற வேண்டிய அரச குமரனுக்கு முனிவர் உணர்த்திப் பல்வகை அரசு நெறிகளில் இக்காமத்தைக் கடியும் தன்மை, 'தூம கேது புவிக்கு எனத் தோன்றிய, வாம மேகலை மங்கையரால் வரும், காமம் இல்லை எனின் கடுங்கேடு எனும் நாமம் இல்லை நகரமும் இல்லையே' என்கிறார்.

**கள்ளுண்ணாமை பண்பு**

கள்ளுண்ணாமை பற்றிய கருத்துக்களைச் சுக்கிரீவன் மூலம் காட்டுகிறார் கம்பர். கள்ளுண்பவன் செய்ந்நன்றி மறக்கிறான். சூழ்நிலை உணர்வின்றி மயங்குகிறான். தீய செயல்களில் ஈடுபடுகின்றான். கள்ளுண்டு நிலையிழந்த சுக்கிரீவனே கள்ளுண்ணலின் தீமையை,

**"வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் மரபுஇல் கொட்பும்**
**தஞ்சம் என்றாரை நீக்கும் தன்மையும் களிப்பும் தாக்கும்**
**கஞ்சமெல் அணங்கும் தீரும் கள்ளினால் அருந்தினார்**
**நஞ்சமும் கொல்வது அல்லால் நரகினை நல்காது அன்றே"13**

என்று கூறுகிறார். தீமைகள் பலவற்றுக்கும் அடிப்படையாகவும், தூண்டுதலாகவும் கள்ளுண்ணல் அமையும் பாங்கு இதன் கண் கம்பர் காட்டுகிறார்.

**முடிவுரை**

மக்களின் வாழ்வியல் நெறிகளைக் கல்வியில் பெரியவரான கம்பர் தம் காப்பியத்தில் பங்கு கொண்ட பாத்திரங்கள் வழி சிறப்பாக எடுத்துக்காட்டுகிறார். 'கம்பர் வழி வாழ்ந்து உலகில் சிறந்து ஓங்குவோம்'

**சான்றெண் விளக்கம்**


1. கம்ப.பாலகாண்டம், பா.36
2. கம்ப, பா.2776
3. மேலது, பா.1422
4. மேலது, பா.6119
5. மேலது, பா.6169
6. மேலது, பா.6827
7. மேலது, பா.6859
8. மேலது, பா.2868
9. மேலது, பா.6981
10. மேலது, பா.2489
11. மேலது, பா.6464
12. மேலது, பா.9123
13. மேலது, பா.4363

# சுஜாதாவின் கட்டுரைகளில் அறச்சிந்தனைகள்

***சா.அனிகரோலின்,** முனைவர் பட்ட ஆய்வாளர், ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.

**முன்னுரை**

**அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல் - என்றது குறள்**

மேலும்,

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்**
**ஆகுல நீர பிற** -எனவும் கூறுகிறது.

ஆகவே மாசில்லா மனிதில் செய்யும் அனைத்தும் அறமாகும். அறச்செயல்கள் மூலம் வருவது மட்டுமே இன்பம் எனவும் குறள் கூறுகிறது. அதனால் தான் அறத்து பாலில் இல்வாழ்க்கையிலிருந்து துறவு வரையிலும் அன்புடைமையிலிருந்து கொல்லாமை வரையிலும் அறக்கருத்துக்கள் பொதியப்பட்டன. விவிலியத்தில் உன் தேவனை நினை என்ற கட்டளைக்கு ஒப்பான கட்டளையாக உன்னைப்போல் பிறரையும் நேசி என்ற கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு கட்டளைகளிலும் மற்ற அனைத்து கட்டளைகளும் அடங்கியுள்ளன என்று சொல்லப்பட்டுள்ளது. ஆம், தன்னைப் போல் பிறனை நேசி என்று சொன்ன பின்னர் கொலை செய்யாதே, களவு செய்யாதே, பிறனுடையதை இச்சியாதே என தனித்தனியே சொல்ல வேண்டியது இல்லை. அவ்விதமே மனதில் குற்றமின்றி செய்யும் செயல் எல்லாம் அறமே என்கிறார் வள்ளுவர்.

**சுஜாதாவின் கட்டுரைகள்**

சுஜாதாவின் எழுத்து ஆளுமை என்பது பலரின் சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டது. மனிதநேயமிக்கது. தொலை நோக்கு பார்வை உடையது. அவரின் கருத்தாக்கத்தினால் பல கட்டுரைகள் வெளிவந்தன. கணையாழி இதழில் 1965 முதல் 1998 வரை வெளிவந்த கட்டுரைகள் கணையாழியின் கடைசி பக்கக் கட்டுரைகள் என புத்தகமாக உயிரிமை பதிப்பகத்தில் வெளிவந்துள்ளது. அது தவிர "சுஜாதாட்ஸ்" கட்டுரைகள், "கற்றதும் பெற்றதும்" கட்டுரைகள், "ஓரிரு எண்ணங்கள்" போன்ற கட்டுரைகள் புத்தகமாக வெளிவந்துள்ளன. இக்கட்டுரைகளில் சங்க இலக்கியம் முதல் ஹைக்கூ வரையிலும் தமிழ் கணிணி முதல் சார்பியல் கோட்பாடு வரையிலும் ஸ்ரீரங்கத்திலிருந்து அமெரிக்கா வரையிலும் அனைத்தையும் அலசி ஆராய்ந்துள்ளார்.

இவற்றினூடே மதம், மருத்துவம், போர் என சமூகத்திற்கான அறச்செய்திகளையும், ஆங்காங்கே விதைக்கிறார். ஆனால் சுஜாதாவின் பாணி கை, கால்களைப்பிடித்து வைத்து சங்கில் குழந்தைகளுக்கு மருந்து புகட்டும் பாணி அல்ல. விவிலியத்தில் சொல்லப்படும் நல்ல நிலத்தில் விழுந்த விதை உவமை போன்றது. நல்ல நிலத்தில் விழுந்த விதை நூறாக பெருகுவது போல் நாம் தான் எடுத்து பயன்படுத்த வேண்டும்.

இக்கட்டுரைகளில் இன்று மக்களிடையே வெறுப்பை விதைக்கும் போர்கள் குறித்தும் போர்கள் தவிர்க்கப்பட வேண்டியது அவசியம் என்பதையும் வலியுறுத்துகிறார்.

**விளையாட்டிலும் அறச்சிந்தனை**

மனித குலத்தின் அழிவுக்கு போரே காரணம். உலக போர்களிலிருந்து கார்கில் போர் வரையில் ஏற்படுத்திய மனித உயிர் இழப்புகள், பொருள் இழப்புகள், நில அழிவுகள் ஏராளம், மெரினாவில் பார்த்த இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி குறித்த கட்டுரையில், இந்தியா உலகக் கோப்பை ஜெயிக்கவில்லை என்றாலும் பிரச்சனை இல்லை. பாகிஸ்தானை ஜெயித்தால் போதும் என்ற சிந்தனை எப்படி வந்தது? பாகிஸ்தானை கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றதற்கு இந்திய பிரதமரும், இராணுவ தளபதியும் வாழ்த்து சொல்வது ஏன்? இதற்கு காரணம் காஷ்மீர் பிரச்சனையா? சரித்திரத்தில் காஷ்மீர் இணைப்பு பற்றி நமக்கு குற்ற உணர்ச்சி உள்ளதா? எனக்கேள்வி கேட்பதைக் காண்கிறோம். ஜெயமோகன் எழுதிய அறம் எனும் நூலிலும் "காரி டேவிஸ் (Garry Davis) என்ற அமெரிக்கர் ஜெயமோகனிடம் கேட்டதாக கூறும் ஒரு வாசகம் "உன்நாட்டு அரசின் மீது படை எடுப்பது பிற நாட்டு அரசு. அது அரசுகளின் நடுவே உள்ள போராட்டம். உன்னை வைத்து அந்தப் போரை நிகழ்த்துபவர்களை உனக்கு பாதுகாப்பு தருபவர்கள் என நீ நினைக்கிறாய்" (1) என்ற வரிகள் இக்கருத்தையே வலியுறுத்துக்கின்றன.

அமெரிக்கா ஈராக் போரைப் பற்றி சுஜாதா கூறுகையில் அமெரிக்க தேசத்தின் எல்லைகளைத் தற்காத்துக் கொள்ள ஈராக்கின் மேல் படை எடுக்கிறோம் என்று புஷ் கூறுவது நகைப்பிற்குரிய விஷயம் என்றும் அமெரிக்கா, ஈராக் போரினை டோனி பிளேரும் அவரது நாய் குட்டியையும் தவிர உலக தலைவர்கள் அனைவரும் எதிர்க்கிறார்கள் எனவும் கிண்டல் செய்கிறார் சுஜாதா.

**கண்ணி வெடிகளை எதிர்த்த விடிவெள்ளி**

கண்ணி வெடியின் பயங்கரத்தை முழுமையாக அலசும் சுஜாதாவின் இக்கட்டுரையின் இறுதி பத்தி ஒன்று மட்டுமே போதும், நம்மை நெறிப்படுத்த. இக்கட்டுரையில் தம் ஆதங்கத்தை இவ்வாறு கொட்டுகிறார். "பின் ஏன் எல்லா தேசங்களிலும் இந்த கண்ணி வெடிகளை உற்பத்தி செய்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள்? மனிதனால் எங்கேயாவது சண்டை போடாமல் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு மேல் இருக்கமுடியாது. அது அவனது ஆதார மிருக குணம். ஆதி மனிதன் காட்டுமிராண்டி நாட்களிலிருந்து வந்தது. மேலும் நாசங்களை உற்பத்தி செய்துவிட்டு நேசங்களைத் தேடுவதும், நவீன வாழ்வை எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிக்கலாக்கி கொள்வதும் மனித குணங்களின் மிச்சமிருக்கும் குணம்"(2) என்கிறார். இவ்வரிகளின் வழி சுஜாதாவின் மனிதநேயம் நமக்குப் புலனாகிறது.

**உயிருக்கு இன்னாமை செய்தல்**

சுஜாதா, இந்தியா அணுகுண்டு பரிசோதித்ததை வன்மையாகக் கண்டிக்கிறார். அணுகுண்டு பரிசோதனை என்பது அதனைப் பயன்படுத்துவதற்கு ஆதாரமாக அமையும். ஜெர்மனி, ஜப்பான், இஸ்ரேல் போன்ற நாடுகள் அணுகுண்டு சோதிக்கவில்லை. இஸ்ரேலுக்கு வராத நெருக்கடியாக இந்தியாவிற்கு வந்தது என்றும், அதனால் தானே பாகிஸ்தானும் சோதித்தது என்றும் வருத்தப்படுகிறார். இந்நிகழ்வு உலக அரங்கில் மக்களிடையே ஒருவித பயத்தை உருவாக்கி இருக்கும்.

இறுதியாக, "இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே காஷ்மீர் காரணமாக போர் மூண்டு அணுக்குண்டு உபயோகித்து பின்னர் புத்தி வந்து போர் நிறுத்தம் செய்தால் அவர்களது அணுக்குண்டை விட நம்முடைய குண்டு 4 ½ மடங்கு அதிக சக்தி வாய்ந்தது. எனவே நம்மிடம் 10,000 பேர் செத்திருந்தால் அவர்களிடம் 45,000 பேர் செத்திருப்பார்கள்"(3) என்று கவலைக்கொள்கிறார்.

**யுத்தம் இல்லா உலகம்**

அமெரிக்கா, ஈராக் போர் குறித்து எழுதிய கட்டுரையில் இக்கருத்து பிரதிபலிக்கிறது. "போர் என்பதே இந்த நூற்றாண்டில் வழக்கொழிந்திருக்க வேண்டும். போரிடத்தான் வேண்டும் என்றால் சந்திரனனிலோ அல்லது யாருமில்லா பாலைவனத்திலோ அவரவர் ஏவுகனைகளை ஏவி நடுநிலையாளர்கள் தேர்ட் அம்பயர்கள் போல் கவனித்து யார் ஜெயித்தார்கள் என்று தீர்மானிக்கலாம். உலகில் எப்போது போர் இல்லாமல் போகும்? விண்வெளியிலிருந்து ஏதாவது ஒரு பெரிய ஆபத்து வரும் போது, ஈராக் இலலை, அமெரிக்கா இல்லை, இந்தியா இல்லை, பாகிஸ்தான் இல்லை, பிரிட்டன் இல்லை உலகம் மட்டுமே முக்கியமானதாகும். அதற்காவாவது ஒரு எரி நட்சத்திரம் நம்மை அணுகி பயம் காட்டிவிட்டு திசை திரும்ப வேண்டும்"(4) என்கிறார். இவ்வரிகள் சுஜாதாவின் போர் வேண்டாம் என்பது குறித்த இறுதி கருத்தாக அமைகின்றன என்பதை நம்மால் உணர முடிகிறது.

**முடிவுரை**

**அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாந் தரும் - குறள்**

கொல்லாமைக் கருத்துக்களே இக்கட்டுரைகளின் மையக் கருத்தாக அமைந்துள்ளது என்பதை அறிகிறோம். மக்களை கொன்று குவிக்கும் போரை எதிர்த்து எழுதிய சுஜாதாவின் கட்டுரைகள் நம்மிடையே அறச்சிந்தனையை போதிப்பதாக அமைக்கின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. "அறம்" ஜெயமோகன், ப.353
2. "சுஜாதாட்ஸ்" சுஜாதா ப.29
3. "சுஜாதாட்ஸ்", சுஜாதா, ப.150
4. "கற்றதும் பெற்றதும்", தொகுதி II சுஜாதா, ப.84
5. "திருக்குறள்", திருவள்ளுவர், கொல்லாமை

# தமிழ் இலக்கியங்கள் கூறும் வாழ்வியல் சிந்தனைகள்

*கு.நந்தினி, முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்-நாமக்கல்.

**"கல்தோன்றி மன்தோன்றாக் காலத்தே வாளோடு**
**முன்தோன்றி மூத்த குடி"**

என்று சான்றோர்களால் போற்றப்படுவதற்கேற்ப சிறப்புடன் விளங்குவது நம் தமிழ்மொழியாகும். வாழையடி வாழையாக வாழ்ந்த பெருமையினையும் வரலாற்றுச் சிறப்பினையும் கொண்டது. இத்தகைய தமிழ் மொழியில் எண்ணற்ற இலக்கண இலக்கியங்கள் தோன்றித் தமிழின் சிறப்பினை உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

இலக்கியம் என்பது ஒரு மாபெரும் கடல் ஆகும். கடல்நீர் அள்ள அள்ள குறையாத வளமுடையது. அதுபோல குறையாத வளமைபெற்றது இலக்கியமாகும். உலகில் தமிழ் தோன்றிய இலக்கியங்களில் தான் மக்களுடைய வாழ்வியல் நெறிமுறைகள் அழகாகச் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன. இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி என்கிறோம். இத்தகைய இலக்கியங்களில் கூறப்பெறும் வாழ்வியல் சிந்தனைகள் குறித்து பின்வருமாறுக் காண்போம்.

**தமிழ் இலக்கியங்கள் கூறும் அறம்**

உண்மையில் தமிழ் இலக்கியம் முழுவதுமே அறஇலக்கியம்தான். சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், அறநூல்கள், சிற்றிலக்கியங்கள், புராணங்கள் என்றெல்லாம் பல பிரிவுகள் இருந்தாலும் அவையாவற்றின் அடிச்சரடும் அறமே ஆகும்.

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்"**

பொறாமை, பேராசை, சினம், கொடியசொல் ஆகிய நான்கினையும் நீக்கி வாழ்வதே அறம் என்கிறது திருக்குறள்.

காப்பியங்களும் இவ்வாறே அமைந்திருக்கின்றன. அரசியலில் தவறு செய்தவர்களுக்கு அறமே கூற்றாகும். கற்பிற் சிறந்த பெண்களைப் பலரும் போற்றி வணங்குவர், ஊழ்வினை தவறாமல் தனது பலனை அளிக்கும் என்ற மூன்று அறக்கருத்துக்களை உணர்த்தவே இயற்றப்பட்டது சிலப்பதிகாரமாகும். அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற அடிப்படைக் கருத்தினை உடையது கம்பராமாயணம். இவ்வாறு அணுகி நோக்கும்போது தமிழ் இலக்கியங்கள் யாவுமே அற இலக்கியங்கள் என்பதை நாம் உணரலாம்.

**கொடைப்பண்பு**

சங்க இலக்கியங்களில் சிறந்த சான்றாக கடையெழு வள்ளல்களின் கொடைத்திறனையே எடுத்துரைக்கலாம். முல்லைக்கொடியின் கொழுகொம்பு பெறாத திகைப்பைக் கண்ணால் கண்டபின், தன் செல்வநிலையும், வாழ்வும் மறந்து, அதற்கு உதவுவதாலே உணர்வாய்த் தான் ஊர்ந்து வந்த தேரை அங்கு அதற்கு உரியதாக நிறுத்தி வந்தான் 'பாரி' என்னும் வள்ளல். இரவலர்க்குக் குதிரைகளையும், நாட்டையும் நல்கியவன் 'காரி' என்னும் வள்ளல். நீலநிறப் பட்டாடையையும் செல்வனுக்குக் கொடுத்து வேண்டிய பொருள்களையும் ஊர்களையும் வந்தவர்க்கு எல்லாம் வழங்கி எல்லாம் இழந்தவன் 'ஆய்' என்னும் வள்ளல் பெறுவதற்கு அரியதாய் வாழ்நாள் வளர்ச்சிக்கே உரியதாய் பெற்ற நெல்லிக்கனியையும் தான் உண்ணக் கருதாமல், புலவர் நெடிது வாழ விழைந்து கொடுத்து மகிழ்ந்தவன் 'அதியமான்' நண்பர்தம் இல்லறம் நடத்தற்கு வேண்டுவன நல்கிப் புகழ் பெற்றவன் 'நள்ளி'. கூத்தாதம் கலைவாழ அவர்க்கு நாடு கொடுத்துக் களித்தவன் 'ஓரி' மயில் அகவியதைக் கேட்டுக் குளிரால் நடுங்கி கூவியதாக உணர்ந்து தன் போர்வையை அதற்குப் பரிசாகக் கொடுத்தவன் 'பேகன்'.

'மகாபாரதத்தில்' கேட்போர்க்குயெல்லாம் அள்ளி அள்ளி கொடுக்கும் கொடைப்பண்பு மிக்கவன் 'கர்ணன்' ஆவான்.

**தலைவனின் கடைமை**

'பொருளில்லாருக்கு இவ்வுலகம் இல்லை' என்பது குறள்மொழி. ஒரு குடும்பத் தலைவன் தன்மனைவி மக்களை மட்டும் காத்தால் போதாது தன் சுற்றத்தையும் காக்க வேண்டும். இத்தகைய கடமையுணர்வு மிக்கவனாக சுற்றம் தழுவும் இயல்பினனாகத் தலைவன் இருத்தல் வேண்டும் என்பதைச் சங்க இலக்கியம் எடுத்துரைக்கிறது. செல்வத்தை அறவழியில் ஈட்டி, நல்லவழியில் தனக்கும் பிறருக்கும் பயன்படுத்துதலே இல்வாழ்க்கையின் பயனாக சங்கநூல்களும் வலியுறுத்துகின்றன.

> **"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
> **வேளாண்மை செய்தற் பொருட்டு"**

என்று வள்ளுவரும் இக்கருத்தினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**தலைவியின் கடமை**

மனையறத்தின் வேராக விளங்குபவள் மனைவி. அவள் மாட்சியுடையவளாக அமைந்தால் மட்டுமே இல்லறம் சிறக்கும். 'யாண்டுபல ஆகியும் நரையில ஆகதல் யாங்காகியர்' எனப் பிசிராந்தையாரிடம் கேட்டபோது 'மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்' என்று மனைவியின் மாண்பினைத்தான் முதலில் எடுத்துரைத்தார் அவர்.

> **"இல்லதுஎன் இல்லவள் மாண்பானால் உள்ளதுஎன்**
> **இல்லவள் மாணாக் கடை"**

என்று வள்ளுவரும் 'வாழ்க்கைத் துணைநலம்' என ஓர் அதிகாரமே வகுத்து இல்லாளின் அருமையைப் புலப்படுத்தினார்.

> **"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
> **மெல்லியற் பொறையும், நிறையும், வல்லிதின்**
> **விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும்**
> **பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"**

எனத் தலைவிக்கு உரிய பண்புகளைச் சுட்டிக்காட்டுபவர் தொல்காப்பியர். விருந்தோம்பும் பொறுப்பு, இல்லறத் தலைவியாகிய மனைவியையே பெரிதும் சார்ந்தது. வெளியூரிலிருந்து வருவோர் மாலைப்பொழுது வந்துவிட்டால் ஓர் ஊரில் தங்கி மறுநாள் காலையில் தம் பயணத்தைத் தொடங்குவது பழங்கால வழக்கம். அவ்வாறு, வீட்டுத் திண்ணையில், மாலைக் காலத்தில் வந்து தங்கும் அப்புதியவரை அந்த ஊரில் உள்ளவர் அன்போடு உணவளித்து உபசரிப்பர். இல்வாழ்க்கையில் விருந்தோம்பல் சிறந்த கடமையாக போற்றப்பட்டது.

**இலக்கியம் கூறும் கற்பு**

ஒருத்தி ஒருவனை மணந்து, வாழ்விலும் தாழ்விலும் பிரியாதிருப்பதுவே மானுடதர்மம் என்கிறார் வியாசர். அந்த ஒருத்தி கற்புள்ளவளா என்பதற்கு அடையாளம், அவளைப் பார்க்கிற எந்த ஆணுக்கும் அவள் மீது தவறான எண்ணம் தோன்றாமல் இருப்பதுவே ஆகும் என்கிறது மணிமேகலை. கற்புத் தன்மையில் ஆணென்றும் பெண்ணென்றும் நாம் பார்க்கக்கூடாது. இந்த இப்பிறவிக்கு இன்னொரு மாதரை சிந்தையாலும் தொடேன் என்றது இராமவாசகம். கற்பு, பெண்ணுக்கு மட்டுந்தான் என்பது ஆணாதிக்கத்தார் பூட்டிய அடிமை விலங்கு. இப்படிப்பட்ட கற்பு, பொதுமையானது என்பதற்கு முன்னோடியான இலக்கியம் திருக்குறளே. பரத்தையரின் வருகைகள் மேற்கூறிய பனுவல்களில் இழிவுநிலையைச் சுட்டவே இடம்பெறுகின்றன. அதிகதாரம் ஒருவனுக்கு அவமானம் என்பது வள்ளுவக் கணிப்பு. அதுபோலவே ஒருத்தி, பலருக்குத் துணையாவது பெரும்பாவம் என்கிறார் மகாபாரதத்தில் துரொபதியைப் பெற்றெடுத்த துரபதன். லெட்சுமியின் மறுவடிவம் என்பதாலும், சிவன் எழுதிய தீர்ப்பு என்பதாலும் துரொபதை ஐவர்க்கும் மனைவியானாளாம் என்பது பாரதக் கதை உணர்த்தும் செய்தியாகும். இன்றும் பேச்சுவழக்கில் 'பத்தினியின் பார்வை பட்டால் பச்சை மரமும் பற்றி எரியும்' எனக் கூறுவதுண்டு. முத்தாரம் தவழும் மார்பின் முலைமுகத்தைத் திருகி எறிந்ததும், மதுரை தீவாய்ப்பட்டது. அவள் கற்பின் சக்தியைக் கண்ட பலரும் அவளைப் பத்தினியெனப் போற்றிப்புகழ்ந்தனர் என்று சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.

நட்பு

> **"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
> **அகநக நட்பது நட்பு"**

என்றும்,

**"அழிவின் அவநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு"**

என்றும்,

**" உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு"**

என்றும்,

**"கொட்புன்றி ஒல்லும்வாய் ஊன்றும்நிலை"**

என்றும் நட்புப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார் வள்ளுவர்.

மகாபாரதத்தில் கர்ணனுக்கும் துரியோதனனுக்கும் உள்ள நட்பு ஆழமானது. தேரோட்டி மகனை அங்கதேச அரசனாக்கி நட்புப் பாராட்டியவன் துரியோதனன்.

சங்க இலக்கியத்தில் உயிர்காக்கவல்ல நெல்லிக்கனியைத் தான் உண்ணாது தமிழால் ஆகியிருந்த அவ்வைக்குத் தந்த நட்புரிமை அதியமானுக்கு உரியது.

கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் நட்பை காலம் உள்ளவரை போற்றப்படவல்ல இலக்கிய நட்பு இதுவெனச் சான்றோர் குறிப்பிட்டுள்ளனர். பாரி, கபிலர் நட்பு அனைவராலும் போற்றப்பட்ட நட்பேயாகும்.

தமிழ் இலக்கியங்கள் கூறும் வாழ்வியல் சிந்தனைகளான அறம், கொடை, தலைவன், தலைவி கடமைகள் கற்பொழுக்கம், நட்பு ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலக்கியமும் இயற்கை மருத்துவமும்

***முனைவர் ர.பன்னீர் செல்வன்,** தமிழ்த்துறைத் தலைவர், ஜெய்ராம்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்.

இயற்கை பல நூறாயிரம் ஆண்டுகள் இடைவிடாத உன்னத முயற்சியால் உருவாக்கிய ஈடற்ற உயிரினம் மனித இனமாகும். இயற்கையோடு வாழ தலைப்பட்ட மனிதன் பின்னாளில் இயற்கையிலிருந்து விலகி வாழ முற்பட்டான். இயற்கையில் கிடைத்த உணவினையும் அப்படியே உண்டு வாழ்ந்தான். அவன் என்று உணவினை சமைத்துண்ணத் தொடங்கினானோ அன்று முதல் அவனுடைய உடலும் உள்ளமும் சிதைய தொடங்கின. இயற்கையின் விதிகளை மீறுவதற்கு அது அளிக்கும் தண்டனையே நோய்.

மனிதனும் மற்ற விலங்கு, பறவைகளைப் போல் இயற்கையான உயிர். அவன் இயற்கையோடு முழு அளவிற்கு இணைந்து வாழும்போதுதான் ஓர் உண்மை மனிதனாகத் திகழ முடியும். சங்ககாலத்தில் நம் முன்னோர்களாகிய தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தமையை அறிய முடிகின்றது. அதை வெளிக் கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இயற்கையும் இயற்கை மருத்துவமும்**

**“இயற்கை என்பது எது?** இயல்பாக அமைவது, இயல்பாக செயல்படுவது, ஐம்பூதங்கள் இயற்கை, அவற்றின் சேர்க்கையான உலகமும் இயற்கை. ஓரறிவுயிர் முதல் அனைத்தும் இயற்கை எனினும், ஆறறிவினை உடைய மனிதன் தன் அறிவாலும், செயற்கையாலும் இயற்கையின் இயல்பு நிலையிலிருந்து மாறி அமைவதால், மனிதன் நீங்கலாக பிற இயற்கையாக எண்ணப்படுகின்றன.”(க.வெள்ளைவாரணனார், 1984:ப.49)

மேற்காணும் கூற்று மனிதனைச் செயற்கை நிலைக்குத் தள்ளுகின்றது. காரணம் அவன் செயற்கை நிலைக்கு மாறிவிட்டான். **‘இயற்கைக்கு மாறுபட்டது அனைத்தும் அரைகுறையானவை’** என்கிறது பிரான்ஸ் பழமொழி. செயற்கை நிலையில் அவன் என்று வாழ முனைந்தானோ அன்றே நோய்களும் அதற்கான மருந்துகளும் தேவைப்பட்டன. தற்காலங்களில் இயற்கை மருத்துவம் என்ற ஒன்று தோன்றி வளர்ந்து வருகின்றது.

இயற்கையில் கிடைக்கும் பழங்கள், காய்கறிகள், தானியங்கள், சாறுகளைக் கொண்டு அனைத்து நோய்களையும் நீக்குவதாக கூறுகின்றனர். ஆனால் பழங்கால மக்கள் இயற்கையோடியைந்த வாழ்வினை மேற்கொண்டதோடு இயற்கை உணவுகளையும் உண்டு இயற்கை முறைகளையும் கையாண்டு வந்தமை புலப்படுகின்றது. மேலும், இந்த உலகம் இயற்கையின் கூறுகளான நிலம், நீர், காற்று, தீ, வானம் ஆகிய ஐம்பூதங்களின் கலவையால் உருவானது என்பதனை,

> **“நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்**
> **கலந்த மயக்கம் உலகமாதலின்” (தொல்.பொருள்.மரபியல் 90)**
> **என்ற வரிகளும்,**
> **“மண் திணிந்த நிலனும்**
> **நிலன் ஏந்திய விசும்பும்**
> **………………..**
> **ஐம்பெரும் பூதத்து இயற்கை போல” (புறம் 2:1-6)**

என்ற புறநானூற்று வரிகளும் நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகிய ஐந்து பெரிய ஆற்றல்களையுடையது இயற்கை என வரையறுத்துக் கூறுகின்றது.

**வாழிடத் தூய்மை**

சங்கத் தமிழர்கள் தங்களுடைய வாழிடங்களையும், சுற்றுப்புறங்களையும் இயற்கை முறையில் பேணிக்காத்து வந்துள்ளனர். ஒரு மனிதனுக்கு அவன் உண்டு உறங்க உறைவிடம் அவசியம். அவ்வுறைவிடத்தை அவன் இயற்கையான புற்களைக் கொண்டு வேய்ந்ததை,

> **“காயல் வேய்ந்த தேயா நல் இல்” (அகம்.370:5)**

என்ற பாடலடி காட்டுகின்றது. **‘அருகம்புல்’** போன்ற புற்களின் காற்றுப் பட்டாலே உடலுக்கு நல்லது என்பர்.

அதனாலென்னவோ நம் முன்னோர்கள் புற்கள், மர ஓலைகள் ஆகியன கொண்டு தங்கள் உறைவிடத்தை அமைத்துக் கொண்டனர்.

பசுவின் சாணம் தீமை செய்கின்ற கிருமிகளை அழிக்கின்றது என்பது தற்போதைய ஆய்வாளரின் கூற்று. ஆனால், நம் சான்றோர்களாகிய தமிழர்கள் வீட்டிற்கு சாணமிட்டு மெழுகியதை,

**"பைஞ்சேறு மெழுகிய படிவல் நல் நகர்"** (பொருந.278)

என்ற பாடலடி மூலம் அறிய முடிகின்றது. இன்றும், அவ்வழக்கம் கிராமப்புறங்களில் நிலவி வருவதைக் காணமுடிகின்றது.

**மண் மருத்துவம்**

இயற்கை மருத்துவத்தில் பல மருத்துவ முறைகள் உள்ளன. அவற்றில் ஒன்று மண் மருத்துவம். இதற்கு நல்ல வளமான செம்மண் அல்லது களிமண்ணைப் பயன்படுத்துகின்றனர். மண் மருத்துவத்திற்கு புற்று மண்ணே சிறந்ததாகக் கூறுவர். வயல் வெளி மண்ணில் தற்போது மக்கள் செயற்கை நச்சுத்தன்மையை உண்டாக்கி விட்டனர். இது ஒவ்வாமையை ஏற்படுத்தி தீமையை விளைவிப்பதாகக் கூறுவர். புற்றுமண்ணே தூய்மையான மண் என்பர். ஏனெனில் புற்றுக்களை உருவாக்குபவை கரையான்கள். அவை நச்சுத்தன்மை வாய்ந்த மண்ணை நாடுவதில்லை. எனவே மண் மருத்துவத்திற்கு புற்று மண்ணே சிறந்ததாக கூறுகின்றனர்.

புற்றுமண்ணைக் கொண்டு இயற்கை மருத்துவர்கள் தோல் நோய்கள், வயிற்று நோய்கள், மலச்சிக்கல் போன்றவற்றை நீக்குகின்றனர். சங்க இலக்கியங்களிலும் இதுபோன்று மண்ணை சில நோய்களுக்குப் பயன்படுத்தியுள்ளமை புலனாகிறது. தலை நோய்களைப் போக்கவும், கூந்தல் வனப்புறவும் எருமண்ணாகிய களிமண்ணைப் பயன்படுத்தியதை,

**"………. யாமே என்**
**கூழைக்கு எருமண் கொணர்கம்"** (குறுந்.113 : 4 - 5)
**"கூழை பெய் எக்கர்க் குழ இய பதுக்கை"** (குறுந். 373 : 5)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

சங்க காலத்தில் ஆநிரைகளை மீட்கச் செல்லும் மழவர்கள் தங்களுக்கு பெரும் பகையாக இருந்த இருமல் நோய்க்கு மண்ணை வாயில் அடக்கி சென்றுள்ளனர். இதனால் இருமல் நோய் குணமாகும் என்பதை அறிந்துள்ளனர்.

இதனை,

**"………………. செங்கண் மழவர்**
**வாய்ப்பகை கடியும் மண்ணொடு கடுந்திறல்"** (அகம். 101 : 5 – 6)

என்ற பாடல் வரிகள் காட்டுகின்றன. இன்றும் கிராமப் புறங்களில் **'அம்மை'** என்ற நோய்க்கு மருந்தொன்றை தயார் செய்வர். வேப்பிலை, மஞ்சள், ஆமணக்கு விதை இவற்றோடு சுத்தமான களிமண்ணை சேர்த்தரைத்து பாதிக்கப்பட்ட இடத்தில் தடவுவர். அம்மை விரைவாக குணமாகி விடுகின்றது. மேலும், அக்கி என்ற வெப்ப நோய்க்கும் பாதிக்கப்பட்ட பகுதியில் களிமண்ணை பூசி வருவதை அறிய முடிகின்றது.

**எண்ணெய் மருத்துவம்**

முன்னோர்கள் நெடுங்காலம் முதற்கொண்டு எண்ணெய் தேய்த்துக் குளிப்பதை முறையாகக் கையாண்டு வந்துள்ளனர். ஆகையால் தான் அவர்கள் அழகுடனும், ஆரோக்கியத்துடனும் திகழ்ந்தனர். நாள் முழுக்க ஓடியாடி பாடுபடும் மனிதனின் உடலில் வெப்பம் அதிகரிக்கிறது. இதனால் பல நோய்கள் உண்டாக ஏதுவாகின்றது. எனவே அதனைச் சமன்படுத்த எண்ணெய் குளியல் அவசியமாகிறது. ஒரு இயந்திரம் வெப்பத்தினால் இயங்குகிறது. அது பழுதடையாமல் ஓடுவதற்கு எவ்வாறு எண்ணெய் தேவைப்படுகின்றதோ அதுபோல் நமது உடலும் அதிக வெப்பத்தினால் கேடு அடையாமல் இருக்க எண்ணெய் குளியல் அவசியம்.

அதிக வேலை, கோபம், காமம் போன்ற தீய உணர்வுகளினால் உண்டாகும் அதிக வெப்பத்தினால் மூளை, நரம்பு மண்டலம் முதலியவை பாதிக்கப்பட்டு அதனால் நம் உடல் பல நோய்களால் பீடிக்கப்பட்டு மரணம் ஏற்பட ஏதுவாகிறது. (எம்.ஏ.கந்தசாமி, 1988: 42)

மேலும், நாள்தோறும் அதிகாலையில் பல் துலக்கியபின் 10 மில்லி எள் எண்ணெயை வாயிலிட்டு 15 நிமிடம் கொப்பளித்து வந்தால் பல நோய்கள் தீருவதாக ஆய்வாளர்கள் கண்டுள்ளனர். எள் எண்ணெயே இதற்கு சிறந்ததாகக் கூறுவர். சங்கத் தமிழர்களும் வெண் கடுகை அரைத்து தலையில் தேய்த்து, பின் எண்ணெய் தேய்த்துக் குளித்து வந்துள்ளனர். அதனால் தான் அவர்கள் வனப்புடன் திகழ்ந்துள்ளனர். இதனை,

**"ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்**
**பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கை"** (நற்.40 : 7 – 8)

எண்ணெய் குளியலுக்குப் பசு நெய்யைப் பயன்படுத்தியுள்ளனர். ஆடவர் மட்டுமின்றி பெண்டிரும் எண்ணெய் தேய்த்தலுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். இதனை,

**"நெய்யணி கூந்தலர் பித்தையர்"** (பரி. 10 : 76)

என்ற பாடலடி விளக்குகின்றது. இவ்வாறு சங்க காலத்தில் வாழ்க்கையை ஒரு வரைமுறைக்குட்படுத்தி வாழ்ந்தமை புலனாகின்றது.

**தமிழரின் உணவுமுறை**

உணவு என்பது உயிரினம் அனைத்தும் உயிர்வாழ இன்றியமையாத ஒன்று. பசி வந்தால் பத்தும் பறக்குமென்பர். பசியினை ஒரு நோயாகக் கூறுவோரும் உண்டு. ஆதலால் தான் பசிப்பிணி என்றனர். பசி வந்திட்டால் எந்த வேலையும் நிறைவாக செய்ய இயலாது. அவ்வளவு கொடுமையானது பசி. இதை வலியுறுத்துவதாக ஔவையாரும்,

**"மானம் குலம் கல்வி வன்மை அறிவுடைமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை – தேனின்**
**கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்**
**பசி வந்திட பறந்து போம்"** (பெ.சுயம்பு.2005: 11)

என்ற பாடல் வழி உணர்த்துகின்றார். உடல் ஆரோக்கியத்திற்கும், உணவிற்கும் தொடர்புண்டு. நாம் நாள்தோறும் உண்ணும் உணவினை முறையறிந்து நெறியறிந்து உண்போமானால் உணவே மருந்தாகும். அதுவே நோயின்றி வாழ துணைபுரியும். **'பசித்துப்புசி'** என்றொரு பழமொழி உண்டு. நாம் உண்ட உணவு, சீரணமாகியதை உணர்ந்து, பசியெடுத்தபின் உண்டால் மருந்தென்பது தேவைப்படாது என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இதனை,

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்"** (குறள்.642)

என்ற குறள் வழி விளக்குகின்றார்.

நாம் உணவினை முறையறியாமல் கண்டவாறு உண்கிறோம். அதனால் பல நோய்களுக்கு ஆட்படுகிறோம். உயிரையும் உடலையும் காக்கின்ற மரபு வழி உணவுகளை உண்ண மறந்து தற்கால உணவுகளை உண்டு நோய்க்கு ஆளாகிறோம். தற்காலங்களில் பழங்கள், காய்கள், தானியங்கள் அனைத்திற்கும் நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயன உரங்களைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் நம் மூதாதையர் இயற்கை முறையில் விளைவித்தப் பொருட்களை உண்டு நோய், நொடியின்றி நீண்ட ஆயுளுடன் வாழ்ந்துள்ளனர். சங்கத் தமிழர்கள் தினை, வரகு, கொள்ளு, உளுந்து, அவுல், எள், கீரை போன்ற சத்து மிகுந்த உடலுக்கு ஊட்டம் தரும் உணவுப் பொருள்களை உணவாக உட்கொண்டமையை,

**"கொள்ளோடு பயறு பால் விரைஇ வெள்ளிக்**
**கோல் வரைந்தன்ன வால் அவிழ் மிதவை"** (அகம் 37 : 12 – 13)

என்ற பாடலடி காட்டுகின்றது. கொள்ளை அவரையோடு சேர்ந்து சமைத்துண்டதை

**"சிறுகொடி கொள்ளே பொறிகிளர் அவரையொடு"** (புறம். 335 : 5)

என்ற பாடலடி அறிவுறுத்துகின்றது. கொள்ளானது வாதவலி, நீர் ஏற்றம், குளிர்சுரம் ஆகியவற்றைப் போக்குமென்பதை,

**"வாத நீரேற்றமொடு மன்னு குளிர் காய்ச்சலும் போம்**
**சாதி நறுங் கொள்ளுக்குத்தான்"** (ப.கு.924)

என்ற பதார்த்த குணபாட பாடலடி கூறுகின்றது. மேலும் கொள்ளோடு வரகும். தினையும் உண்டு வந்ததை,

**"கருங்கால் வரகே இருங்கதிர் தினையே**
**சிறுகொடி கொள்ளே"** (புறம். 335 : 4 – 5)

என்ற பாடலடி விளக்குவதை அறியலாம். இவ்வாறு நம் முன்னோர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்ததோடு சத்துமிக்க உணவுகளை உண்டு வாழ்ந்ததை அறிய முடிகின்றது. மேலும் மருந்து என்பதை அவர்கள் தனியாகக் கையாளாமல் **'உணவே மருந்து - மருந்தே உணவு'** என்று வாழ்ந்தமையை அறிய முடிகின்றது. நாமும் இயற்கையை பேணிக்காத்து நம் முன்னோர்களைப் போல் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தோமானால் நீண்ட ஆயுளோடு நலமுடன் வாழ முடியும்.

# பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பார்வையில் உழவன்

*முனைவர் த.க.புஷ்பராஜ், உதவிப்பேராசிரியர், -தமிழாய்வுத்துறை, கந்தசாமிக்கண்டர் கல்லூரி, வேலூர்-நாமக்கல்.

இயற்கையால் படைக்கப்பட்ட உயிரினங்கள் அனைத்தும் இயற்கையோடு பின்னிப் பிணைந்து வாழ்வது தான் சாலச் சிறந்தது. ஆனால் பரிணாம வளர்ச்சியின் உச்சத்தில் இருக்கும் மனிதன் இயற்கையை தன் போக்கிற்கு மாற்ற நினைத்ததின் விளைவை இப்போதே நாம் உணர்ந்து விட்டோம். இன்னும் சில ஆண்டுகளில் அதன் தாக்கம் அதிகமாகுமே தவிர குறைவதற்கு வாய்ப்பு இல்லை என்றே தோன்றுகிறது.

இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை வாழ்ந்தவர்களில் தமிழர்கள் மிக முக்கியமானவர்கள். ஏனெனில் பஞ்ச பூதங்களைக் கடவுளாக கருதி வழிபாடு செய்தவன் தமிழன். நம் நாட்டின் முதுகெழும்பாக இருந்ததும், இருந்து கொண்டு இருப்பதும், இருக்கப் போவதும் உழவே…

ஒரு காலத்தில் மூவேந்தர்கள் செழிப்பாகவும், கடல் கடந்த வெற்றிகளை குவித்தார்கள் என்றால் அதற்குக் காரணி உழவே. உழவுக்கு வரி இட்டு அதைக்கொண்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தார்கள். மேலும் வானுயர்ந்த கோபுரங்களும், கலைச் சின்னங்களும் இன்றளவும் நிமிர்ந்து நின்று நம் நாட்டின் பொருளாதாரம் உழவே என்று உரைக்கச் சொல்லிக் கொண்டு இருக்கின்றன.

ஆனால் இன்றைய சுயநலமிக்க மனிதர்களால் உழவும், உழவு சார்ந்த தொழிலும், தொழிலாளியும் நசுக்கப்பட்டதன் விளைவாக உழவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. நாட்டின் வளர்ச்சிக்கு விஞ்ஞானம் முக்கியம் தான். ஆனால் உழவு அத்தியாவசியம் என்பதை உணரும் நாள் வந்தே தீரும். ஒரு நாட்டின் உற்பத்தி செய்த பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமை இல்லாத தொழில் உழவு என்பது வேதனைக்குரியதே!

இத்தகைய காலக்கட்டத்தில் விவசாயம் சார்ந்த விழிப்புணர்வு மிக அவசியமாக இருந்த போதிலும் போதிய விழிப்புணர்வு இல்லை என்றே கூற வேண்டும். வள்ளுவர் தொடங்கி தற்கால கவிஞர்களில் ஒருசிலர் விவசாயத்தின் முக்கியத்துவத்தை மக்களிடம் கொண்டு செல்கின்றனர், சென்றனர். கிட்டதட்ட 50 ஆண்டுகளுக்கு முன்னே தெளிவான விழிப்புணர்வுகளையும், எச்சரிக்கையையும் செய்தவர் சமகால கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

**“உழுவார் உலகத்தார்க்கு ஆணி அ∴து ஆற்றாது**
**ஒழுவாரை எல்லாம் பொறுத்தது”**

என்று உழுபவனின் சிறப்பினையும், உழவுத்தொழிலின் பெருமையையும் வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

**விவசாயக்கூலி**

அந்தக் காலக்கட்டத்தில் நிலம் இல்லாத விவசாயிகள் விவசாயக் கூலிகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் பல்லாயிரக்கணக்கான நிலப்பரப்புக்களைச் சொந்தம் கொண்டாடி வந்த நிலப்பிரபுக்களின் கீழ் கொத்தடிமைகளாக விலங்குகளுக்குச் சற்றே மூத்தப் பிள்ளைகளாக வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் நடவு, களையெடுப்பு, அறுவடை ஆகிய காலங்களில் மாடாக உழைத்து வந்தனர். கடினப்பட்டு உழைத்தவனுக்குக் கிடைத்ததெல்லாம் கஞ்சியும், கூழும்தான். அதுவும் சில சமயங்களில் கிடைக்காமல் பட்டினியுடன் போராடி வாழ்ந்து வந்தனர். மனிதனின் அடிப்படை உரிமைகளாகக் கருதப்பட்டவைகள் அனைத்தும் இவர்களுக்கு மறுக்கப்பட்டதைக் கவிஞர் உற்று நோக்கியவர்.

மாடுபோல் உழைத்து நம் நாட்டை செழிப்படையச் செய்தவர்களுக்குச் செழிப்பான வாழ்வு இல்லா விட்டாலும், அடிப்படை உரிமைகளாவது கிடைத்திருக்க வேண்டும்.

**“உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டேம் என்பார்க்கும் நிலை”**

என்ற வள்ளுவனின் வாக்கினைக் கேட்டு பெருமைப்படுவதை விட்டு விட்டு உழைக்கும் வர்க்கத்தை மேன்மை அடையச் செய்வதற்கு உண்டான வழியைத் தேடிய பட்டுக்கோட்டையாருக்கு பொதுவுடைமை இயக்கம் தோள்கொடுத்தது.

நிலம் இருப்போரிடம் உடல் உழைப்பு இல்லை, நிலம் இல்லாதாரிடம் உழைப்பு இருக்கும் நிலையில், என்னதான் கடினப்பட்டு மாடாக உழைத்தாலும் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை.

**"பாடுபட்டீர்கள் பருக்கையில்லாதொடு**
**பட்டியில் மாடென வாழ்கின்றீர்"**

என்று பாவேந்தர் வருத்தமடைய, பட்டுக்கோட்டையார்,

**"வாழை நிலைக்குது சோலை தழைக்குது**
**ஏழைகளுக்கதில் என்ன கிடைக்குது**
**கூழைக்குடிக்குது, நாளைக் கழிக்குது**
**ஓலைக் குடிசையில் ஒட்டிக் கிடக்குது"**

என்று உழவனின் நிலையை எடுத்துரைக்கிறார்.

**உழைப்பிற்கில்லை ஊதியம்**

இன்றைய விவசாயமானது காற்றில் தூற்றிய விதையாக பயனில்லாமல் போய்க்கொண்டு இருக்கின்றது. தன்னுடைய வாழ்நாளின் பயனுக்காக உழவன் பயிர் செய்தாலும் கூட அதில் மற்றவர்களின் நலனும் அடங்கியுள்ளதை நாம் அனைவரும் அறிந்த ஒன்றேயாகும். இருப்பினும் உழைப்புக்கேற்ற பலன் என்பது இல்லாமலே போய்விடுகின்றது. நாட்டில் இருக்கின்ற சகமனிதனாக உழவன் கருதப்பட்டாலும் கூட இந்த நாடானது செழிப்புடன் வாழ்வதற்கு ஒரு முக்கியப் புள்ளியாக உழவன் கருதப்படுகின்றான்.

நாட்டின் நலனுக்காக மாடாக அவன் உழைத்தவனும் நெல் மணியை உருவாக்குவதற்காக நாற்றினைப் பறித்து நடவு செய்கின்றவனும், இயந்திரம் இல்லாத காலங்களில் தன் கைகளின் உதவியால் ஏற்றம் இறைத்து நீர் இறைத்தவனும் தன்னுடைய பசியை மதியாது தன் பிள்ளைகளின் நலனுக்காகவும் தான் பயிரிட்ட நாற்றினைத் தன் குழந்தையாகக் கருதி எங்கேநீர் இல்லாமல் வாடி விடுமோ என்று நினைத்து அதனைப் பிழைக்க வைப்பதற்காக அல்லும் பகலும் பாராது உழைத்தவனுமான நம் விவசாயிக்கு ஓர் வாய் சோறு என்பது கூட வெறும் கனவாகவே உள்ளது.

**"நாடு செழிச்சிட மாடா ஒழைச்சவன்**
**நாத்துப் பறிச்சவன், ஏத்தம் எறைச்சவன்**
**மூடாத மேனியும் ஓடா எளச்சவன்**
**போடா விதைகளும் போட்டு வளர்த்தவன்**
**அரை வயிற்றுக் கஞ்சி குடிக்கிறான் சிலநாள்**
**அதுவுங் கிடைக்காமத் துடிக்கிறான்"**

என்ற பட்டுக்கோட்டையாரின் வரிகளைப் படிக்கின்ற பொழுது தன் நிலத்துக்காவும், நாட்டின் செழிப்பிற்காகவும் மாடாக உழைத்தவன் ஒரு நேரக் கஞ்சி குடித்துவிட்டு உறங்குகிறான். சில வேளைகளில் அதுகூட இல்லாமல் பட்டினி கிடக்கின்றான் என்பதனை எண்ணும் பொழுது அவன் மூன்று வேளை உழைத்தாலும் கூட ஒருவேளை பலன் கூட கிடைப்பதில்லை என்பது வருத்தம் அளிக்கின்றது.

உழவனின் இத்தகைய மேலான அவல நிலையினை பட்டுக்கோட்டையார் குறிப்பிடும் பொழுது நம் மனமானது அதிர்ச்சியினை அடைந்தாலும் அவனுக்காகத் தோள் கொடுக்க எவரும் முன்வரவில்லை என்பது வேதனைக்குரியது. விவசாயம் தழைக்க வேண்டும்! நாட்டின் முதுகெலும்பு விவசாயம் என்று நாம் படிக்கும் பொழுதும் மற்றவர்களின் முழக்கங்களை கேட்கின்ற பொழுதும் வெளிப்படுத்துகின்ற உணர்வினை அரங்கேற்ற முன் வருவதில்லை. அவ்வாறிருக்கையில் நாம் எவ்வகையில் உழவுத் தொழிலை மேம்படுத்த முடியும் என்பது கேள்விக்குரியதாகும்.

**நாடுகள் செய்த மாடுகள்**

காடுகளைத் திருத்தி, கழனிகளை மேம்படுத்தி, உழவினை மேற்கொண்ட உழவனால் இந்த நாடானது செழிப்பான நிலையினை மேற்கொண்டாலும், நாங்கள் அணிவது என்னவோ கந்தைத் துணியே ஆகும். பாடுகள் பலபட்டு பண்டங்களைப் பெருக்கி தொழிலாதாரத்தை மேம்படுத்தினாலும் எங்கள் கை கொண்டுதான் மெய்யினைப் போர்த்த வேண்டியுள்ளது என்று கூறும் பொழுது நம் கண்ணில் கண்ணீர் வருகின்றது. அவர்கள் துயர் போக்கிட நாம் துணைசேர வேண்டும் என்று உணர்வு ஏற்படுகின்றது.

இதனை ஊக்குவிக்கும் வகையில்,

**“பாடுகள் பட்டோம்-புவி**
**பதமுறவே நாங்கள் நித்தமும் உழைத்தாம்...**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**சிந்தை மெலிந்தோம்-எங்கள்**
**சேவைக்கெலாம் இது செய் நன்றிதானே?**

என்ற புரட்சிக்கவியின் தீச்சுடர் கவிஞரின் பாடலில் கொழுந்து விட்டு எரிவதை நன்கு உணர முடிகிறது.

எவ்வளவு தான் உழைத்தாலும் உழவன் உயர்வை அடைவதில்லை. அயர்வதும் இல்லை என்ற கொள்கை கொண்டவன் விவசாயி. ஓய்வில்லாமல் உழைத்தவனுக்குக் கிடைப்பது என்னவோ ஓலைக் குடிசைதான் என்ற வரியானது சிந்திக்க வைக்கின்றது.

இவ்வாறாக உழவனின் புலம்பலையும், அவன் கடின உழைப்பின் பயனாக அவன் வேர்வையானது நெற்கதிர்களாக சிரிக்கின்ற பொழுது அவன் அடைகின்ற மனமகிழ்ச்சியையும், அயராத உழைப்பினால் கொல்லும் ஈட்டி போல் நிற்கின்ற நெற்கதிர்களை காணும் பொழுதும், நெல்லானது கதிராகும் நாளினை அவன் திருவிழா போல் கொண்டாடுவதையும் பட்டுக் கோட்டையார் மிகவும் அழகாகப் பாடியுள்ளார்.

உழவின் சிறப்பினைத் தனது பாடல்களில் அழகாகவும் நேர்த்தியாகவும், உழவு நடைபெறாமல் போனால் உலகம் இயங்காது என்பதை உணர்ந்த கவிஞர் உழவர்களுக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும், உழைக்கும் மக்களின் உணர்வினை உலகிற்கு எடுத்துக் காட்டுவதாகவும் கவிஞர் பட்டுக்கோட்டையாரின் பாடல்கள் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.